ஆண்டறிக்கை
2019

தேசிய அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவ நிறுவனம்

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்
ஜயந்தி மாவத்தை, அனுராதபுரம்,
இலங்கை.
தொலைபேசி இலக்கம்: +94-25-3230004
தொலைநகல் இலக்கம்: +94-25-2223983

இணையத்தள முகவரி: www.niphm.gov.lk

தேசிய அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவ நிறுவனம்,
ஜயந்தி மாவத்தை,
அநுராதபுரம்.

கௌரவ விவசாய அமைச்சர்,
விவசாய அமைச்சு,
இல.85/5, கொவிஜன மந்திரய,
இரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்ல.

கௌரவ விவசாய அமைச்சர்,

ஆண்டறிக்கை-2019

1971ம் ஆண்டின் நிதியியல் சட்டம்38 பகுதி 14(2) இன் படி, தேசிய அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவ நிறுவனத்தின் 2019ம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையையும் நிதிநிலைக் கூற்றுக்களையும் இத்தால் சமர்ப்பிக்க விரும்புகின்றோம்.

தங்களின் நம்பிக்கையுள்ள

பேராசிரியர். டபிள்யு.எ.பி. வீரக்கொடி,
தலைவர்,
தேசிய அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவ நிறுவனம்

சட்டமும் சட்டவாக்கங்களும்

தேசிய அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவ நிறுவனம் (அறுவடைக்கு பிந்திய தொழிநுட்ப நிறுவனம்) கமத்தொழில் அமைச்சினது செயல்நோக்கின் கீழ் இயங்குகின்ற நிறுவனமாகும். இந்த நிறுவனம் சகல விவசாய பயிர்களினதும் அறுவடைக்கு பிந்திய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி விடயங்களை மேற்கொள்ளும் நோக்கத்தின நிமித்தம் 1137/10 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானி மூலம் 2000 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆம் திகதி தாபிக்கப்பட்டது. புதிதாக தாபிக்கப்பட்ட இந்த நிறுவனம் 1976ஆம் ஆண்டு FAO/UNDP உதவியுடன் அநுராதபுரத்தில் அமைக்கப்பட்டிருந்த நெற் சந்தைப்படுத்தல் சபையினது அரிசி பதனிடுகை, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திய நிலையத்தின் (RPRDC) பணிகளை பொறுப்பேற்றுக்கொண்டது. இப்புதிய நிறுவனத்திற்கு அரிசி மற்றும் தானியங்கள் மட்டுமன்றி ஏனைய வயற் பயிர்கள், மரக்கறிகள், பழங்கள், வாசனைத் திரவிய பயிர்கள் மற்றும் வெட்டுப் பூந்தாவர பயிர்கள் ஆகியவறினதும் அறுவடைக்கு பிந்திய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி விடயங்களை மேற்கொள்வதற்கான பொறுப்புக்களும் செயற்பாடுகளும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 2093/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் 27.10.2018 ஆம் திகதி இந்நிறுவனத்தின் பெயரானது தேசிய அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவ நிறுவனம் என மாற்றம் செய்யப்பட்டது.

ஆணைகள்

குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள அதிகார ஆணைகளுக்கு இணங்க, இலங்கையில் அறுவடைக்கு பிந்திய தொழில் நுட்ப அபிவிருத்தியின் நிமித்தம் ஆராய்ச்சி சார்ந்த தேவைகளை இனங்கண்டு, முந்துரிமையளித்து அத்தகையவை தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தும் நோக்கத்திற்காக சம்பந்தப்படுகின்ற சகல முகவர் நிலையங்களையும் ஒன்றிணைப்பதற்கான ஒருங்கிணைப்பு கேந்திர நிலையமாக தொழிற்படுவதற்கு இந்த நிறுவனம் எதிர்பார்க்கப்படுகின்றது.

தூரநோக்கு

தேசிய உணவு பாதுகாப்பிற்கான அறுவடைக்கு பிந்திய தொழிநுட்பத்தின் நிலைபேறான அபிவிருத்தியின் மிகச்சிறந்த மத்திய நிலையமாக விளங்குதல்

பணிக்கூற்று

போட்டித்தன்மை வாய்ந்த விலையில் உள்நாட்டு சந்தைகளுக்கும் மற்றும் ஏற்றுமதி சந்தைகளுக்கும் உதவக்கூடிய வகையில் தரத்திலும் பாதுகாப்பிலும் உயர்ந்த உன்னத உணவுப் பொருட்கள் அடங்கலாக விவசாய உற்பத்தியினதும் மற்றும் விவசாய உற்பத்திப் பொருட்களினதும் விநியோக பெறுமான சங்கிலிகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வினைத்திறன் வாய்ந்த பயனுள்ள அறுவடைக்கு பின்-தொழில் நுட்பம் சார்ந்த தலையீட்டு நடவடிக்கைகளினூடாக தேசிய உணவுப் பாதுகாப்புக்கான நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்கை அடைதல்.

முகாமைத்துவ சபை

2019 திசம்பர் 31 இற்கு அமைவாக

தலைவர்

திரு. ரீ.எச். எம்.பி. சாகர (2018 நவம்பர்-2019 ஏப்பிரல்)
கலாநிதி. எ.ஆர். ஆரியரத்ன (2019 ஏப்பிரல்-2019 திசம்பர்)

உபதலைவர்

திரு. நிசாந்த லியனகே

உறுப்பினர்கள்


பேராசிரியர். அருணி வீரசிங்க
பேராசிரியர் சனத் ஹெட்டியாராய்ச்சி
திரு. ஜே.கே. விக்கிரமசிங்க

சபையின் செயலாளர்

எந்திரி. திரு. ரீ.எம்.ஆர். திசாநாயக்க (ஜனவரி-ஒக்டோபர் 2019)
எந்திரி. திரு. எச்.எம்.எ.பி. இரத்நாயக்க (ஒக்டோபர் – திசம்பர் 2019)

நிறுவனத்தின் கட்டமைப்பு

அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்புத் திட்டத்தின் (ஆ.தி.) பிரகாரம் காணப்படுகின்ற நிறுவனக் கட்டமைப்பு



2018 ஆம் ஆண்டு நிறுவனத்தின் பிரிவுகள் கீழுள்ளவாறு மீள்கட்டமைக்கப்பட்டன. (தற்சமயம், மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை மற்றும் நிறுவனக்கட்டமைப்பு மீள்கட்டமைக்கப்பட்டு வருகின்றது).

1. ஆராய்ச்சி பிரிவு
2. பொறியியல் பிரிவு
3. தொழிநுட்ப பரிமாற்ற பிரிவு
4. அபிவிருத்தி கருத்திட்ட பிரிவு
5. ஆய்வுகூட சேவைகள் பிரிவு
6. திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு
7. நிர்வாகப் பிரிவு
8. நிதிப் பிரிவு
9. கல்விப் பிரிவு
10. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

சிரேஷ்ட முகாமைத்துவம்

2019 திசம்பர் 31 இன்படி

பணிப்பாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி (பதில்)
எந்திரி. திரு. ரீ.எம்.ஆர். திசாநாயக்க (ஜனவரி-ஒக்டோபர் 2019)
எந்திரி. திரு. எச்.எம்.எ.பி. இரத்நாயக்க (ஒக்டோபர் – திசம்பர் 2019)

மேலதிக பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் தொழிநுட்ப பரிமாற்றம்)
எந்திரி. திரு. எச்.எம்.எ.பி. இரத்நாயக்க

மேலதிக பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி)
திரு. ஆர்.கே.ஏ.பி. இராமநாயக்க

ஆராய்ச்சி பிரிவு
கலாநிதி.(திருமதி) நிலந்தி விஜேவர்தன
பி.த | பிரதான ஆராய்ச்சி உத்தியோகத்தர்

தொழிநுட்ப பரிமாற்ற பிரிவு
திருமதி.சமிந்தி திசாநாயக்க
பி.த | சிரேஸ்ட விரிவாக்கல் உத்தியோகத்தர்

ஆய்வுகூட சேவைகள் பிரிவு
திரு. சமிந்த குணவர்தன
பி.த | ஆராய்ச்சி உத்தியோகத்தர்

கல்விப் பிரிவு
எந்திரி.(திரு). தமிந்த அத்தபத்து
பி.த | இயந்திரப் பொறியியலாளர்

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
திரு. ஆர்.எம்.டி.இரத்நாயக்க
அ.த | உள்ளக கணக்காய்வாளர்

பொறியியல் பிரிவு
எந்திரி.பி.டி.எம்.பி.பண்டார
பி.த | இயந்திரப் பொறியியலாளர்

அபிவிருத்தி கருத்திட்ட பிரிவு
திரு.டபிள்யு.எம்.சி.பி. வாசல
பி.த | சிரேஸ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்

திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு
திருமதி. ருவங்கா இரத்நாயக்க
பி.த | சிரேஸ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தர்

நிர்வாகப் பிரிவு
திரு.ஆர்.கே.ஏ.பி. இராமநாயக்க
பி.த | மேலதிக பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி)

நிதிப் பிரிவு
திரு.நிலுக இலங்கசிங்க
பி.த | கணக்காளர்

முகாமைத்துவ குழுக்கள்

2019 திசம்பர் 31 இன்படி

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

பெயர்	பதவி நிலை
திரு.ஆர்.எம்.டி.ஜி.என்.பி. இரணதுங்க	தலைவர்
திரு. டபிள்யு.பி.ஜே.கே.விக்ரமசிங்க	உறுப்பினர்
எந்திரி. மகேஸ் திசாநாயக்க	செயலாளர் (01.01.2019 - 01.11.2019)
எந்திரி.ஹெச்.எம்.பி.ஆர்.இரத்நாயக்க	செயலாளர் (01.11.2019 – 31.12.2019)
திரு.ஆர்.எம்.டி. இரத்நாயக்க	அழைப்பாளர்
திருமதி.எம்.வை.ஜே.வீரசிங்க	அவதானிப்பாளர்
திரு.யு.எஸ்.எல்.குமார	அவதானிப்பாளர்

ஆராய்ச்சி ஆலோசனைக் குழு


பெயர்/பதவி	இடம்
பணிப்பாளர் நாயகம்	விவசாயத் திணைக்களம், இலங்கை
தலைவர்	இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கைகளுக்கான நிலையம்
தலைவர்	இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம்
தலைவர்	பாவனையாளர் அதிகார சபை
பேராசிரியர்.கே. சமரசிங்க	விலங்கு விஞ்ஞான பிரிவு, பேராதனை பல்கலைக்கழகம்
கலாநிதி (திருமதி) கினிகத்தர	விவசாய முறைகளுக்கான திணைக்களம், இலங்கை இரஜரட்ட பல்கலைக்கழகம்
பேராசிரியர். எஸ்.பி. அகம்பொடி	சமூக மருத்துவ திணைக்களம்இ மருத்துவ பீடம், இலங்கை இரஜரட்ட பல்கலைக்கழகம்
பேராசிரியர். எஸ்.பி. நவரத்ன	உணவு விஞ்ஞானமும் தொழிநுட்பமும் திணைக்களம், பிரயோக விஞ்ஞான பீடம், ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
கலாநிதி எ.கே. குலதுங்க	உற்பத்தி பொறியியல் பிரிவு, பொறியியல் பீடம், பேராதனை பல்கலைக்கழகம்

ஆராய்ச்சி வெளியீட்டுக் குழு

பெயர்	பதவி நிலை
மேலதிக பணிப்பாளர் (ஆ & தொ.ப)	தலைவர்
பி.த /தொழிநுட்ப பரிமாற்றம்	செயலாளர்
பி.த /ஆராய்ச்சி	உறுப்பினர்
பி.த /பொறியியல்	உறுப்பினர்
பி.த /திட்டமிடல் கண்காணிப்பு	உறுப்பினர்

தேசிய அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவ நிறுவனமானது விவசாய அமைச்சின் கீழ் இயங்கிவருகின்றது.இந்நிறுவனம் நாட்டினது உணவு பாதுகாப்பினை இலக்காககொண்டு அறுவடைக்கு பிந்திய தொழில்துறையின் சகல விடயங்களையும் கையாள்கின்றது. இது முன்னர் அறுவடைக்கு பிந்திய தொழிநுட்ப நிறுவனம் என்ற பெயரில் இயங்கியது. அறுவடைக்கு பிந்திய தொழிநுட்ப நிறுவனமானது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 1972இன் 11ஆம் இலக்க அரச விவசாயக் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தினது சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் 1137/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலமாக 19 ஜூன் 2000ஆம் ஆண்டில் தானியங்கள், அவரை இன பயிர்கள் எண்ணெய் விதைகள்,பழங்கள், மரக்கறிகள், வாசனைத் திரவியங்கள், ஏனைய வயற் பயிர்கள் மற்றும் அலங்காரத் தாவரங்கள் ஆகியவற்றின் அறுவடைக்கு பிந்திய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பொறுப்பான நிறுவனமாக உருவாக்கப்பட்டது. தேசிய உணவு பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் நோக்குடன் இந்நிறுவனமானது 42 ஆராய்ச்சி கருத்திட்டங்களையும் 02 அபிவிருத்தி கருத்திட்டங்களையும் 2019ஆம் ஆண்டு செயற்படுத்தியிருந்தது. இச்சகல கருத்திட்டங்களும் பொருளாதார ரீதியில் முக்கியமான விவசாய பொருட்களின் வழங்கல் மற்றும் பெறுமதி வலையமைப்பின் முக்கிய பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தியிருந்தன. அறுவடைக்கு பிந்திய இழப்பைக் குறைத்தல், உணவு பதனிடலும் பெறுமதி சேர்த்தலும் மற்றும் உணவு பாதுகாப்பும் மனித போசணை எனும் மூன்று பிரதானமான விடயங்களின் கீழ் ஆராய்ச்சி கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இந்த 42 ஆராய்ச்சி கருத்திட்டங்களில் 15 கருத்திட்டங்கள் 2020ஆம் ஆண்டிலும் தொடரவேண்டியவையாக உள்ளன.

அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்களின் மூலமாக, விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகள், தொடர்ச்சியான பயிற்சிகள் மற்றும் செயல் விளக்கங்கள் போன்றவற்றின் ஊடாக பொருத்தமான அறுவடைக்கு பிந்திய தொழில்நுட்பங்கள் பங்காளர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. தரம் மற்றும் அளவு என்பவற்றில் மேலும் திட்ட பயனாளர்கள் அறுவடைக்கு பிந்திய இழப்பை குறைப்பதற்கான அடையாளப்படுத்தப்பட்ட முக்கிய செயன்முறைகளின் உள்ளக கட்டமைப்பை அறுவடைக்கு பிந்திய தரம் மற்றும் அளவு சார்ந்த அதிக இழப்புக்களை ஏற்படுத்தும் முக்கிய விடயங்களாக



அடையாளப்படுத்தப்பட்ட வகைப்படுத்தல், தரப்படுத்தல், பாதுகாப்பான பழுக்கவைத்தல், பொதியிடல் மற்றும் கொண்டுசெல்லல் போன்ற செயற்பாடுகளின் உள்ளக கட்டமைப்புக்களை மேம்படுத்துவதற்காக பயனாளர்களுக்கு மானியமும் வழங்கப்பட்டது. நிறுவனமானது இந்த அபிவிருத்தி திட்டங்களினூடாக மா, பப்பாசி, வாழை மற்றும் கொய்யா போன்ற நான்கு வகையான பழங்களின் கையாளல் மற்றும் பதப்படுத்தல் நிலையங்களை மேம்படுத்தப்பட்ட அறுவடைக்கு பிந்திய தொழிநுட்பங்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்டன. அதாவது, இலங்கை முழுவதும் 50 மாம்பழ நிலையங்கள், 60 வாழைப்பழ நிலையங்கள், 50 பப்பாசிப்பழ நிலையங்கள், 20 கொய்யாப்பழ நிலையங்கள் உருவாக்கப்பட்டதோடு 32 புதிய வர்த்தக நாமங்கள் இப்பழங்களுக்காக சந்தையில் அறிமுகம் செய்யப்பட்டன. பாதுகாப்பான முறையில் பழுக்க வைக்கப்பட்ட தரமான பழங்களை உற்பத்திசெய்தல், வழங்கல் என்பதுவே இத்திட்டங்களின் பிரதான கருவாகும். கையாளல் மற்றும் பதனிடல் நிலையங்களை உருவாக்கியதன் மூலம் பயனாளர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடைந்துள்ளது. மேலதிகமாக நுகர்வோருக்கு நல்ல தரமான பழங்கள் நியாயமான விலையில் வழங்கப்படுவதோடு விவசாயிகளுக்கு மட்டுமன்றி வழங்கல் வலையமைப்பில் உள்ள அனைத்து பங்காளர்களுக்கும் அதிக விலையும் கிடைக்கின்றது. 2019ம் ஆண்டிற்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி திட்டங்களுக்காக விவசாய அமைச்சினூடாக 95.5823 மில்லியன் ரூபா பணம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

இறுதியாக, இந்த திட்டங்களின் வெற்றியின் மூலம் அறுவடைக்கு பிந்திய இழப்பானது குறையையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது விவசாய நடவடிக்கைகளில அடையாளப்படுத்தக்கூடிய தாக்கத்தையும் ஏற்படுத்துவதோடு தேசத்தை முன்னேற்றத்தை நோக்கியும் அழைத்துச் செல்லும்.

2019ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்ட அனுபவத்தின் அடிப்படையில், இந்த நிறுவனமானது அறுவடைக்கு பிந்திய தொழிற்துறையினை எதிர்வரும் காலங்களில் மேலும் முன்னோக்கி கொண்டு செல்லும் என நான் நம்புகிறேன்.

பேராசிரியர்.டபிள்யூ.பி. வீரக்கொடி தலைவர்

நிறைவேற்று அறிக்கை –வருடம் ஒரே பார்வையில்

2019ஆம் ஆண்டு இந்நிறுவனத்தின் வெற்றிகரமான வருடமாகும். இந்நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகளான ஆராய்ச்சி, அபிவிருத்தி கருத்திட்டங்கள், தொழில்நுட்ப பரிமாற்ற செயற்பாடுகள், ஆலோசனை சேவை, ஆய்வுகூட மற்றும் இயந்திரவியல் சேவைகள் ஆகியன நாட்டினது விவசாய பயிர்களினது வழங்கள் மற்றும் பெறுமதி வலையமைப்பினை மேம்படுத்தும் முகமாக ஒருங்கிணைக்கப்பட்டது. இது விசேட கவனத்தினை பழங்கள் மற்றும் மரக்கறிகளிற்கு வழங்கியிருந்தது. மேலும் இச்செயற்பாடுகள் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) 2030ஆம் ஆண்டளவில் அடைவதில் நேரடியாக தொடர்புபட்டுள்ளது. அவையாவன, *இலக்கு 2:* பட்டினியை முடிவுறுத்தல், உணவுபாதுகாப்பினையும் போசனை மேம்பாட்டினையும் அடைதல், மற்றும் பேண்தகு விவசாய அபிவிருத்தியினை அடைதல், *இலக்கு12:* பேண்தகு உற்பத்தி மற்றும் நுகர்வு முறைமையினை உறுதிப்படுத்தல். அத்துடன் இந்த செயற்பாடுகள் SDG இலக்கு*1:* ஏழ்மையை முடிவுறுத்தல்; என்பதையும் முன்னிலைப்படுத்துகிறது. இதனால், நாம் நிறுவனத்தின் இலக்கான " தேசிய உணவு பாதுகாப்பிற்கான அறுவடைக்கு பிந்திய தொழிநுட்பத்தின் நிலைபேறான அபிவிருத்தியின் மிகச்சிறந்த மத்திய நிலையமாக விளங்குதல்" என்பதனை நோக்கி முன்னேறகூடியதாக உள்ளது.

ஆராய்ச்சி

நிறுனத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்றிட்டங்கள் அறுவடைக்கு பிந்திய தொழிற்துறை எதிர்கொள்கின்ற தொழில்நுட்ப மற்றும் சமூக பொருளாதார பிரச்சினைகளை தீர்ப்பதனை நோக்கியதாக உள்ளது. இவ்வருடத்தில், 42 ஆராய்ச்சி கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதில் 25 ஆராய்ச்சிகள் விவசாய அமைச்சின் "தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சி திட்டம்" ஊடாக நிதிவழங்கப்பட்ட ஆராய்ச்சி கருத்திட்டங்களாகும் (12 ஆராய்ச்சிகள் 2018ஆம் ஆண்டிலிருந்து தொடர்பவை.13 ஆராய்ச்சிகள் 2019ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டவை); மொத்த ஒதுக்கீடு ரூபா. மில்.4.82 ஆகும். இவை தவிர 3 (மூன்று) ஆராய்ச்சிகள் அரச-தனியார் கூட்டின் மூலமாக தனியார் நிதி பங்களிப்பினூடாக நடாத்தப்பட்டது. இவற்றிற்கு மேலதிகமாக 14 ஆராய்ச்சி கருத்திட்டங்கள் பல்வேறு பல்கலைக்கழகங்களின் பட்டப்படிப்பு மாணவர்களினால் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாராய்ச்சிகள் நிறுவனத்தின் ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள், விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் மற்றும் எந்திரிகளால் மேற்பார்வைசெய்யப்பட்டன.



ஆய்வுகூட பரிசோதனைகள்

அபிவிருத்தி செயற்றிட்டங்கள்

நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்கள் யாவும் முக்கியமாக விவசாய வணிகத்தினை விருத்தி செய்வதற்கும் உணவு பாதுகாப்பினை உறுதி செய்வதற்குமாக தொழில் நுட்பத்திற்கான இசைவாக்கத்தினையும் அறுவடைக்கு

பிந்திய தொழிற்துறையில் அவற்றின் விளைவினை உறுதிப்படுத்தும் நோக்கிலும் மேற்கொள்ளப்பட்டன. 2019ஆம் ஆண்டில் பின்வரும் 02 அபிவிருத்தி செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

- மா, பப்பாசி, வாழை மற்றும் கொய்யாப்பழங்களின் மேம்படுத்தப்பட்ட வழங்கல் வலையமைப்பின் அவற்றின் தரம் மற்றும் செயல்முறைகளை மேம்படுத்தல்
- மரக்கறி பழங்களின் வழங்கல் வலையமைப்பில் ஏற்படும் அறுவடைக்கு பிந்திய இழப்பினை குறைப்பதற்கு பாதுகாப்பான பொதியிடல் மற்றும் கொன்டு செல்லும் முறைகளை அிமுகப்படுத்தல்

மேற்படி திட்டங்களுக்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூபா.32.47 மில்லியனாகும். "மா, பப்பாசி, வாழை மற்றும் கொய்யாப் பழங்களின் மேம்படுத்தப்பட்ட வழங்கல் வலையமைப்பின் அவற்றின் தரம் மற்றும் செயல்முறைகளை மேம்படுத்தல்" திட்டத்தின் கீழ் முப்பத்து நான்கு (34) பழ பதனீட்டு வலயங்கள் முறையான அறுவடைக்கு பிந்திய கையாளல் மற்றும் பதனிடும் முறைகளுடன் இலங்கையில் பரவலாக உருவாக்கப்பட்டது. இதன் மூலம் தரமான மற்றும் பாதுகாப்பான பழங்கள் சந்தைக்கு அறிமுகம் செய்யப்பட்டன. இதன் மூலம் திட்ட பயனாளர்களின் வாழ்க்கைத்தரம் குறிப்பிடத்தக்க அளவில் உயர்வடைந்துள்ளது.

உருவாக்கப்பட்ட பழ வலயங்களின் முலமாக பின்வரும் வர்த்தக நாமங்கள் சந்தைக்கு அிமுகப்படுத்தப்பட்டுள்ளன.





புதிய மற்றும் பொருத்தமான தொழில்நுட்பத்திற்கான இயைபாக்கத்தின் மூலம் தேசத்தின் உணவு பாதுகாப்பை நோக்கி செல்வதற்கான அபிவிருத்தி கருத்திட்டங்கள்

தொழில்நுட்ப பரிமாற்ற செயற்பாடுகள் (பயிற்சிகளும் விரிவாக்கமும்)

வழங்கல் மற்றும் பெறுமதி வலையமைப்பில் நேரடியாகவும் மறைமுகமாகவும் இணைந்துள்ள பங்காளர்களின் அறிவை மேம்படுத்தவும் வினைத்திறனான தொழில்நுட்ப பரிமாற்ற செயற்பாடுகளை உறுதிப்படுத்தும் நோக்கத்தில் பயிற்சி செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இப்பயிற்சிகளில் விவசாயிகள், சேகரிப்பாளர்கள், மொத்த விற்பனையாளர்கள, சில்லறை விற்பனையாளர்கள், உற்பத்தியாளர்கள், விரிவாக்கல் நபர்கள், பல்கலைக்கழக மற்றும் இதர கல்வி நிறுவன மாணவர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவன பயனாளர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர். 2019ஆம் ஆண்டில் 191 பயிற்சிகளினூடாக 5365 பங்காளர்கள் பொருத்தமான அறுவடைக்கு பிந்திய தொழிநுட்பம் தொடர்பில் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். அநுராதபுரத்தில் அமைந்துள்ள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் மற்றும் குருநாகல், கண்டி, நுவரெலியா, அம்பாறை, அம்பாந்தோட்டை, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள மாவட்ட நிலையங்களினூடாகவும் விவசாயத் திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களம், மாகாண சபைகள், மகாவலி அதிகார சபை, கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடனும் இச்செயற்பாடுகள் இலங்கை முழுவதும் செயற்படுத்தப்பட்டது.



தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்வு

ஆலோசனை மற்றும் ஏனைய சேவைகள்

அறுவடைக்கு பிந்திய தொழிற்துறையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சம்பந்தப்பட்டுள்ள அரச, தனியார் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் என்பவற்றிற்கு ஆலோசனை சேவைகளை இந்நிறுவனம் வழங்குகின்றது. இதனூடாக, புதிய பதனிடும் ஆலைகள் அமைப்பதற்கும், இருக்கின்ற ஆலைகளை நவீனப்படுத்துவதற்கும் அத்துடன் அரிசி ஆலை மற்றும் ஏனைய பதனிடும் நிலைய உரிமையாளர்கள் நாளாந்த செயற்பாடுகளில் எதிர்கொள்ளும் தொழிநுட்ப பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் சேவைகள் வழங்கப்பட்டிருந்தன. விவசாய உணவு பதனிடும் துறையில் உள்ள பல்வேறுபட்ட நிறுவனங்களுக்கு அவர்களின் வேண்டுகோள்களின் அடிப்படையில் தொழில்நுட்ப அறிக்கை சாத்தியக்கூறு தொடர்பிலான அறிக்கை என்பவற்றை தே.அ.பி.மு. நிறுவனம் தயாரித்து வழங்கி உதவியிருந்தது.

நிறுவனமானது தனது ஆய்வுகூட மற்றும் இயந்திரவியல் சேவைகளை தனது பங்காளர்களுக்கு விசேடமாக அவர்களது தொழிற்துறை உற்பத்திகள் மற்றும் உற்பத்தி நிரைகளின் தர கட்டுப்பாட்டு செயற்பாடுகளுக்கு வழங்கி ஆதரவளித்திருந்தது. ஆய்வுகூட சேவைகள் இரசாயன, பௌதீக மற்றும் நுண்ணுயிரியல் சேவைகளை கொண்டமைந்துள்ளது. களஞ்சியங்களின் பீடைக்கட்டுப்பாடு (Fumigation) ஆய்வுகூட சேவைப் பிரிவினால் பங்காளர்களுக்கு வழங்கப்படும் மற்றுமொரு சேவையாகும். இயந்திரவியல் பிரிவினால் இயந்திர/உபகரண பரிசோதனையும் மதிப்பீடும் மற்றும் அவற்றின் இயக்குநருக்கான பயிற்சி என்பனவும் வழங்கப்படுகின்றன. 2019ஆம் ஆண்டில் நிறுவனமானது 12 ஆலோசனை சேவைகளை அறுவடைக்கு பிந்திய தொழிற்துறைக்கு வழங்கியிருந்தது.

சமூக, நலன்புரி மற்றும் மத செயற்பாடுகள்

நிறுவனத்தின் ஆளுகையை வலுப்படுத்தல் நிறுவனத்தின் இலக்குகளில் ஒன்றாகும். பணியாளர்களது திருப்தியானது நிறுவனத்தின் வளர்சியில் மிக முக்கியமான விடயமாகும். எனவே, இந்த இலக்கினை அடைவதற்காக பல்வேறுபட்ட சமூக, நலன்புரி மற்றும் மத நிகழ்வுகளும் செயற்பாடுகளும் நிறுவனத்தால் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்படுகின்றது. நெற்சந்தைப்படுத்தும் சபையின் கீழ் வெற்றிகரமாக இயங்கிய அரிசி பதனிடல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் தோன்றலாக 19 ஜூன் 2019 அன்று உருவாக்கப்பட்ட இந்நிறுவனம் தனது 19 ஆண்டுகளை 2019ல் பூர்த்திசெய்திருந்தது. இதனை 25 ஜூன் 2019 அன்று மத நிகழ்வொன்றினை ஒழுங்கமைத்து நிறுவனமானது கொண்டாடியது. நிறுவனத்தின் தலைவருடன் அனைத்து பணியாளர்களும் இணைந்து இதனை கொண்டாடியிருந்தனர். வருடாந்த பொசன் தன்சல நிகழ்வும் இந்த வருடத்தில் வெற்றகரமாக நடாத்தப்பட்டிருந்தது.



வருடாந்த தம்மா நிகழ்வு



வருடாந்த பொசன் தன்சல

நிதி செயல்திறன்

விபரம்	2018 (ரூபா. மில்)	2019 (ரூபா. மில்)	வளர்ச்சி (ரூபா. மில்)
ஆண்டுக்கான பற்றாக்குறை	15.2	19.1	25.66%
ரொக்க சமமான (Cash Equivalent)	12.1	26.8	121.49%
மொத்த மாறும் சொத்துக்கள்	1.9	1.9	-
மொத்த மாறும் பொறுப்புக்கள்	77.5	51.9	-33%
நிகர சொத்து (Equity)	325.7	305.5	-6.2%

மனிதவள மேம்பாடு

12 பல்வேறுபட்ட மனித வள மேம்பாட்டு நிகழ்வுகள் ஊழியர்களுக்காக நடாத்தப்பட்டது. அவையாவன, நிதி திட்டமிடல், விஞ்ஞான பூர்வமாக எழுதும் முறை, நில அழகுப்படுத்தும் முறை(landscaping), விருந்தோம்பல் முகாமைத்துவம் (hospitality management), இதர.



விருந்தோம்பல் முகாமைத்துவ பயிற்சி

புதிய நியமனங்களும் பதவி விலகல்களும்

செயற்றிறன் தொடர்பான முக்கிய குறிப்புகள்

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

தே.அ.பி.மு.நிறுவனத்தின் பிரதான செயற்பாடாக விளங்கும் ஆராய்ச்சியானது, அறுவடைக்கு பிந்திய தொழிற்துறை எதிர்கொள்ளும் தொழில் நுட்பம் சார்ந்த பிரச்சனைகளை தீர்ப்பதனை நோக்கிய திசையில் இயக்கப்படுகின்றது. 2019 ஆண்டிற்கான ஆராய்ச்சிகளின் அடிப்படையில் நோக்கும்போது அடிப்படை ஆராய்ச்சி மற்றும் பிரயோக ஆராய்ச்சி ஆகிய இரண்டு வகையான ஆராய்ச்சிகளும் உள்ளடக்கப்பட்டிருந்தபோதிலுட் பிரயோக ஆராய்ச்சியே ஆதிக்கம் செலுத்துவதாக அமைந்துள்ளது.

2019 ஆண்டில் 42 ஆராய்ச்சி கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இவற்றில் 12 ஆராய்ச்சிகள் 2018ஆம் ஆண்டிலிருந்து தொடர்பவையாகும். 13 ஆராய்ச்சிகள் 2019ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டவையாகும். தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சி திட்டத்தின்கீழ் மேற்படி 25 ஆராய்ச்சிகளுக்கும் விவசாய அமைச்சினால் நிதியளிக்கப்பட்டிருந்தது. தனியார் தொழிற்துறையின் தொழில்நுட்ப பிரச்சினைகளை தீர்ப்பதற்காக தனியார் துறையினால் நிதி வழங்கப்பட்ட மூன்று ஆராய்சிசிகளும் பதின்நான்கு (14) ஆராய்ச்சிகள் மாணவர்களினாலும் மேற்கொள்ளப்பட்டன.

ஆய்ந்தறிந்த முடிவுகள் அறுவடைக்கு பிந்திய தொழிற்துறையில் புதிய தொழிநுட்பமாக அத்துறையின் மேம்பாட்டிற்காக வழங்கப்படுவதற்கு மேலதிகமாக ஆராய்ச்சி முடிவுகள் சரிநிலையாளர்களால் மதிப்பாய்வு செய்யப்படும் தேசிய மற்றும் சர்வதேச ஆராய்ச்சி இதழ்கள், இலங்கை பொறியாளர் நிறுவனம் மற்றும் பல்வேறு பல்கலைக்கழகங்களின் கருத்தரங்குகளிலும் வெளியிடப்பட்டுள்ளது.

2018இல் இருந்து 2019 வரை தொடரும் ஆராய்ச்சிகள்

1. அந்துரக்சு நோயை விசேட குறிப்பீடாக கொண்டு மாம்பழங்களின் அறுவடைக்கு பிந்திய நோய்களை உயிரியல் முறையில் கட்டுப்படுத்தும் சாத்தியமான உயிரியை பாவித்தல்
2. இலங்கையின் பாரம்பரிய அரிசி வகைகளின் கடின மாப்பொருள் மற்றும் போசனை நார்ச்சத்துக்களின் பிரிபயோட்டிக் (prebiotic) சாத்தியமும் உணவு தொழிற்துறையில் அவற்றின் பிரயோகமும்
3. கருத்தகொழும்பான் மாம்பழத்தின் அறுவடைக்கு பிந்திய தரம் மற்றும் சுயவாழ்வு காலத்தை அதிகரித்தல் ஆகிய செயற்பாடுகளில் முற்பரிகரணங்களின் செல்வாக்கு
4. கருவா எண்ணெய் (*Cinnamon Zeylanicum*), சாதிக்காய் எண்ணெய் (*Myristica Sp.*) என்பவற்றை பாவித்து உணவை பதப்படுத்தி பாதுகாப்பதற்கான உணவு சேர்க்கையை உருவாக்குதல் (*Myristica Sp.*)
5. உடன் அறுவடை செய்யப்பட்ட மாங்காய்களை குளிர்விப்பதற்கான வலிந்த காற்று குளிராக்கி வடிவமைத்தலும் உற்பத்தியும்
6. ஒட்சியேற்ற எதிர் செயற்பாடு அதிகரிக்கப்பட்ட அவரை (Legume) இன அல்வா (granular bar)
7. மரக்கறிகளின் உறைநிலை பதப்படுத்தல் செயன்முறையை மேம்படுத்தல் (கரட், போஞ்சி, பீட் றூட்)
8. மாம்பழங்களின் வழங்கல் வலையமைப்பினை அடையாளப்படுத்தல் ஊடாக மேம்படுத்துவதற்காக புவிசார் நிலையிடல் கருவிகளை பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூற்று ஆய்வு: ஓமாரகொல்ல மாம்பழ சேகரிப்பாளர் குழுவினை அடிப்படையாக கொண்ட கற்றல்

நிறுவனத்தின் பதில் பணப்பாளராக கடைமையாற்றிய சிரேட்ட எந்திரி தனது பதவியிலிருந்து விலகி தனியார் துறையில் இணைந்துள்ளார். நிறுவனத்தின் மேலதிக பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் தொழிநுட்ப பரிமாற்றம்) புதிய பதில் பணிப்பாளராக இயக்குநர் சபையின் முடிவுக்கமைவாக நியமிக்கப்பட்டுள்ளார். ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி குழுவினை வலுப்படுத்தும் முகமாக புதிதாக ஒரு இயந்திர பொறியிலாளர் நிறுவனத்திற்கு தேர்வு செய்யப்பட்டிருந்தார்.

எந்திரி எச்.எம்.எ.பி. இரத்நாயக்க
பணிப்பாளர் (பதில்)

9. தாமரைப்பூவின் அறுவடைக்கு பிந்திய வாழ்வு காலம் மற்றும் அதன் தரத்தை மேம்படுத்துவதற்கான மூலோபாயங்களை கண்டறிதலும் அவற்றை மேம்படுத்தலும்
10. பழங்களின் முதிர்வுநிலையை அறிவதற்கான குறைந்த செலவில் விம்பசெயலாக்கி உபகரணம் ஒன்றை வடிவமைத்தலும் மேம்படுத்தலும்
11. இலங்கையில் களஞ்சியப்படுத்தப்பட்ட சோளத்தினை பாதிக்கும் பூச்சிகளிலும் சோளத்தின் தரத்திலும் சித்ரனெல்லா*(Cymbopogon nardus)* புல் இலை பிரித்தெடுப்பின் தாக்கம்
12. புதிய பழங்களை பாதுகாப்பதற்கான உறைநிலை உலர்த்தல் மற்றும் வெற்றிட பொதியிடல் தொழிநுட்பத்தின் வினைத்திறனை சோதித்தல் (பப்பாசி, கொய்யா, அன்னாசி)

2019ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட புதிய ஆராய்ச்சிகள்

1. அறுவடைக்கு பிந்திய விரும்பத்தகாத இயங்கு செயற்பாடுகளினை கட்டுப்படுத்துவதன் மூலம் புதிய தரமான இலை மரக்கறிகளின் (கீரை வகைகள்) தரத்தை மேம்படுத்தல்
2. புதிய நெல்லில் விரைவாக்கப்பட்ட வயதாதலை ஏற்படுத்துவதன் மூலம் அரிசியின் ஒட்டும் தன்மையை அகற்றி அதன் நுகர்வாளர் விருப்பத்தை மேம்படுத்தல்
3. சீதாப்பழத்தின் (*Annona muricata*) பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளின் போசனை மற்றும் மருத்துவ குணநலன்களை ஆய்ந்தறிதல்
4. ஓசோன் பரிகரணத்துடன் கூடிய கரட் (Daucus *corota L*) கழுவும் உபகரணமொன்றினை உருவாக்குதல் மற்றும் அதன் செயல்திறனை மதிப்பிடுதல்
5. மேம்படுத்தப்பட்ட பதப்படுத்தல் மற்றும் களஞ்சிய தொழில்நுட்பத்தின் மூலம் பெரிய வெங்காயத்தின் (*Allium cepa*) அறுவடைக்கு பிந்திய இழப்பைக் குறைத்தல்
6. வெட்டுப் பூக்களின் சுயவாழ்வுக்காலத்தையும் தரத்தையும் மேம்படுத்தக்கூடிய உடனடியாக பாவிக்கக்கூடிய சேர்வையொன்றினை தயாரித்தல்
7. நீரகற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகளை மேம்படுத்துவதன் மூலம் நீரகற்றப்பட்ட பழங்களின் தர இயல்புகளை மேம்படுத்தல்
8. ஈரமான நெல்லினை காயவைப்பதற்கான வெப்ப உலர்த்தியை உருவாக்குதல்
9. முக்கியமான பழங்களின் செயற்கை கனியவைத்தல் செயன்முறையின்போது பழங்களில் காணப்படும் இரசாயன எச்சங்களை மதிப்பிடலும் பொருளாதார ரீதியில் நிலையானதும் மற்றும் பாதுகாப்பான கனியவைத்தலுக்காக மருந்தின் பாவனை அளவு தொடர்பில் நெறிமுறை ஒன்றினை ஏற்படுத்தலும்
10. பாகற்காய், பச்சை மிளகாய் என்பவற்றின் அறுவடைக்கு முந்திய மற்றும் பிந்திய நோய்களை கட்டுப்படுத்துவதற்காக நெல் உமியில் உள்ள சிலிக்கனின் களப்பரிசோதனை
11. அநுராதபுரம், பொலன்னறுவை மாவட்டங்களில் உள்ள பாரிய, நடுத்தர மற்றும் சிறிய அரிசி ஆலைகளின் சக்தி பயன்பாட்டிற்கான வெளியீட்டினை தீர்மானித்தலும் அவர்கள் எதிர்கொள்ளும் உற்பத்தி, தொழிநுட்ப மற்றும் நிதியியல் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குதலும்
12. மரக்கறி வழங்கல் வலையமைப்பில் விலையிடல் யுக்திகளின் பொருளியல் மதிப்பீடு: தூய்மையான உற்பத்தியை நோக்கி
13. பழங்களுக்கு சேதமேற்படுத்தாத தொழிநுட்ப முறையை பயன்படுத்தி பழ ஈ பாதித்த மாம்பழங்களை கண்டறிதல்

தனியார் நிதியிடப்பட்ட ஆராய்ச்சி திட்டங்கள்

1. நெல்லினை ஊறவைக்காமல் வணிக மட்டத்தில் குத்தரிசி (புழுங்கல்) உற்பத்தி செய்தல். ஆராய்ச்சிக்கான நிதியளிப்பு: 'சந்தரு சஹால்', கம்சபஹா மாவத்த, புளியங்குளம, அனுராதபுரம்
2. இலங்கையில் சேமிக்கப்பட்ட தானியங்களை பாதிக்கும் முக்கிய பூச்சிகளுக்கு எதிராக உருவமற்ற சிலிக்காவின் செயல்திறன். ஆராய்ச்சிக்கான நிதியளிப்பு: செமியோகெம் லங்கா பிரைவேட் லிமிடெட் கொழும்பு 2
3. புதிய பழங்களை பழுக்க வைப்பதை தாமதப்படுத்துவதற்காக .்ப்ராப் எத்திலீன் அகற்றும் உறிஞ்சி (சியோலைட், கல்சியம் அலுமினா சிலிக்கேட்) மற்றும் மெசிப்ரோ (சைக்ளோடெக்ஸ்ட்ரின் 96% + 1 எம்சிபி 3%) ஆகியவற்றின் செயல்திறன். பாதுகாப்பான மற்றும் பசுமை தொழில்நுட்பங்கள், இல. 15, மில் ரோடு, நாகொட, கந்தான நிறுவனத்தால் ஆராய்ச்சிக்கு நிதி வழங்கப்பட்டது.

மாணவர்களின் ஆராய்ச்சிகள்

இல.	மாணவர்	பல்கலைக் கழகம்	மேற்பார்வையாளர்	ஆராய்ச்சி தலைப்பு
1	திரு. என்.கஜரூபன்	வயம்ப	திரு.டபிள்யூ.எம்.சி.பி வாசல	ரி.ஜே.சி மாம்பழ களஞ்சியத்தின்போது அதன் சுய வாழ்வு காலத்தை நீடித்தல்
2	செல்வி எச்.டி.எஸ்.ஜே.குணவர்தன	ஊவா வெல்லச	கலாநிதி (திருமதி) ஆர்.எம்.என்.ஏ. விஜேவர்தன	குளிர் களஞ்சியத்திற்கான மாங்காய்களின் (*Mangifera indica* L.) முற்குளிர்வித்தல் நிலைமைகளை உகப்பாக்கல் மற்றும் களஞ்சிய தரத்தினை மதிப்பிடுதல்
3	செல்வி எச்.டி.எஸ்.ஜே.குணவர்தன			குறைந்த பதப்படுத்தப்பட்ட கீரையின் சுய ஆயுள் நீட்டிப்பு (*Lactuca sativa*)
4	செல்வி டபிள்யூ.எம்.டி.எல்.சிறிவர்தன		திருமதி.ஆர்.எம்.ஆர்.என். கே. ரத்நாயக்க	பயிச்செய்கையின்போது மண்ணிற்கிடப்படும் சிலிக்கான் பச்சை மிளகாயின் அறுவடைக்கு பிந்திய தரத்தில் கொண்டிருக்கும் செல்வாக்கு
5	செல்வி டபிள்யூ.டி.எச். டபிள்யு. விஜேரத்ன		கலாநிதி (திருமதி) ஆர்.எம்.என்.ஏ. விஜேவர்தன	கடல் போக்குவரத்தில் நெறிமுறைகளை அமைப்பதற்காக வாழைப்பழம் மற்றும் மாம்பழத்தின் தரம் மற்றும் ஆயுள் நீட்டிப்புக்கான வெவ்வேறு அறுவடைக்கு பிந்திய சிகிச்சைகளின் சோதனை மற்றும் மதிப்பீடு
6	திரு.ஏ.எம்.ஜெயவர்தன		திரு.கசுன் ஹெட்டிகே	நீரகற்றப்பட்ட சீதாப்பழ தூளினை தயாரித்தலும் அதன் தர மதிப்பீடும்
7	செல்வி ஜே.ஏ.எல்.எச்.ஜயசிங்க			பாரம்பரிய அரிசியின் தவிடு சோக்கப்பட்ட பிரிபயோட்டிக் ஜஸ்கிறீம் தயாரித்தல்
8	எம்.ஐ.எ.்ப். இ.்ப்ரா	இரஜரட்ட	கலாநிதி கயான் திலகரத்ன	நீரகற்றப்பட்ட பழங்களின் இறுதி தரத்தில் முற்பரிகரணத்தின் விளைவுகள்
9	செல்வி எம்.டி.ரி. பெரேரா		கலாநிதி (திருமதி) ஆர்.எம்.என்.ஏ. விஜேவர்தன	செயற்கையாக பழுக்க வைக்கப்படும் பப்பாசிப் பழங்களுக்கான நெறிமுறையொன்றினை விருத்திசெய்தல் (Carica papaya)
10	செல்வி கே.ஜி.என்.எச்.குமாரி			செயற்கையாக பழுக்க வைக்கப்படும் கதலி வாழைப்பழங்களுக்கான

				நெறிமுறையொன்றினை விருத்திசெய்தல் (Musa spp)
11	செல்வி செரானி பெர்னாண்டோ		மிஸ். ரி.எம்.ஏ.என் வீரசிங்க	பச்சை மிளகாயின் உறைநிலை பதப்படுத்தலுக்கான நெறிமுறையொன்றினை விருத்திசெய்தல் (Capsicum annum)
12	டிரானி பலுகஸ்வேவா	யாழ்ப்பாணம்	திரு பி.டி.எம்.பி. பண்டார	குரக்கன் சுத்தம் செய்யும் இயந்திரத்தின் வடிவமைப்பு மற்றும் விருத்தி
13	செல்வி ஏ.எம்.எம்.கே.அமரசிங்க	ஸ்ரீஜயவர்தனபுர	கலாநிதி கயான் திலகரத்ன	இரண்டு வெவ்வேறு வாழை வகைகளின் செயல்பாட்டு, பௌதிக இரசாயன மற்றும் ஒட்சியேற்ற எதிர் பண்புகள் மற்றும் வாழைப்பழ மா சேர்க்கப்பட்ட பிஸ்கட்டினை விருத்தி செய்தல்
14	செல்வி சத்சரா தியேலகே		கலாநிதி கயான் திலகரத்ன	இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட இலை காய்கறிகளின் ஒட்சியேற்ற எதிர் செயல்பாட்டில் சமையல் முறைகளின் தாக்கம்

முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் ஆராய்ச்சி கருத்திட்டங்களின் முன்னேற்ற அறிக்கை

2018ஆம் ஆண்டிலிருந்து தொடரும் ஆராய்ச்சிகள்

1. அந்துரக்சு நோயை விசேட குறிப்பீடாக கொண்டு மாம்பழங்களின் அறுவடைக்கு பிந்திய நோய்களை உயிரியல் முறையில் கட்டுப்படுத்தும் சாத்தியமான உயிரியை பாவித்தல்



பிரித்தெடுக்கப்பட் மதுவ இனங்கள்

ஏனைய பயிர்களுடன் ஒப்பிடும்போது பழங்களினதும் மரக்கறிகளினதும் அறுவடைக்கு பிந்திய இழப்பானது அதிகமாக காணப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணிகளில் ஒன்றாக அறுவடைக்கு பிந்திய நோய்கள் விளங்குகின்றன. தற்சமயம் பாவனையில் உள்ள அறுவடைக்கு பிந்திய நோய்களை கட்டுப்படுத்துவதற்கான முறைகளானது (உதாரணமாக, இரசாயன பரிகரணம்) பண்ணையிலிருந்து பாவனையாளரை அடையும்போது மரக்கறி பழங்களின் விலையை பன்மடங்கு அதிகரிக்கின்றன. அத்துடன் அவை மனித உடல் நலத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் கேடு விளைவிப்பவையாகவும் உள்ளன. பாதுகாப்பான உணவு தொடர்பில் அதிகரித்து வரும் கருத்துக்கள் காரணமாக செயற்கையான பங்கசு நாசினிகளுக்கு பதிலாக இந்நோய்களை கட்டுப்படுத்துவதற்கு வேறு பாதுகாப்பான முறையொன்றினை உருவாக்குவதற்கான தேவைப்பாடு எழுந்துள்ளது. தாவர நோய்க்கிருமிகளை கட்டுப்படுத்துவதற்கு அல்லது இல்லாமல் செய்வதற்கு பாவிக்கப்படும் பல்வேறு உயிரியல் முறைகளில் நோய்க்கிருமிகளுக்கு எதிராக பாவிக்கப்படும் பங்கசு, மதுவம் மற்றும் பக்டீரியா போன்ற நுண்ணுயிர் எதிரிகளை பாவிக்கும் முறையானமு உலகளவில் பிரபல்யமானதும் விரைவாக கவனத்தை பெற்றுள்ளதுமான ஒரு முறையாகும். இந்த ஆராய்ச்சியானது நுண்ணுயிர் எதிரியாக செயற்படக்கூடிய நுண்ணுயிரிகள் அந்துரொக்சு நோயை ஏற்படுத்தும் நுண்ணுயிரியான *Colletorichum spp* இன் வளர்ச்சி மற்றும் விருத்தியினை இயற்கையான சூழலில் கட்டுப்படுத்தும் ஆற்றல் அல்லது அவற்றின் பாதிப்பை கட்டுப்படுத்தும் தகமையினை அறிவதனை நோக்கமாக கொண்டமைந்துள்ளது. இதுவரை மதுவ இனமொன்று *Colletorichum spp* இற்கு எதிர்ப்பினை கொண்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. மேலதிகமாக இந்த மதுவ பிரித்தொடுப்பை அடையாளம் காணல், வெளிக்கள பரிசோதனை மற்றும் உயிர் பங்கசு நாசினி உருவாக்கம் என்பன செயற்பாட்டில் உள்ளது.

2. இலங்கையின் பாரம்பரிய அரிசி வகைகளின் கடின மாப்பொருள் மற்றும் போசனை நார்ச்சத்துக்களின் பிரிபயோட்டிக் (prebiotic) சாத்தியமும் உணவு தொழிற்துறையில் அவற்றின் பிரயோகமும்

புரோபயோட்டிக் பக்டீரியாவான *Lactobacillus plantarum* இனை சேர்ப்பதன் மூலம் தெரிவு செய்யப்பட்ட பாரம்பரிய அரிசி இனங்களின் பிரிபயோட்டிக் சாத்திப்பாட்டை ஆய்வுசெய்வதற்காக இந்த கற்றல் மேற்கொள்ளப்பட்டது. ஐந்து பாரம்பரிய நெல் இனங்களான சுவெந்தெல், பச்சைப்பெருமாள், களுஹீனெட்டி, குருளுத்துட, மடத்தவாளை ஆகிய வர்க்கங்கள் பரிசோதனைக்காக எடுக்கப்பட்டன. BG-358 அரிசி வர்க்கமானது கட்டுப்பாட்டு சோதனைக்காக எடுக்கப்பட்டது. இவை யாவும் மா வடிவத்தில் பாவிக்கப்பட்டன. தெரிவுசெய்யப்பட்ட அரிசி வர்க்கங்களில் போசனை நார்ப்பொருள் (Dietary fiber (DF)) மற்றும் கடின மாப்பொருள் resistant starch (RS) என்பன அளவிடப்பட்டன. MRS ஏகார் மற்றும் அரிசி மா என்பன 4:1 எனும் விகிதத்தில் கலந்து மாற்றியமைக்கப்பட்ட வளர்ப்பூடகம் உருவாக்கப்பட்டு அதில் *L.plantarum* சேர்க்கப்பட்டது. *L. plantarum* புரோபயோட்டிக் பக்டீரியாவாகவும் *Escherichia coli* குடல்வாழி பக்டீரியாவாகவும் வளர்ப்புடகத்தில் சேர்க்கப்பட்டு பின் சமூகத்தை உருவாக்கும் அலகுகள் மற்றும் ப்ரிபயோட்டிக் செயற்பாட்டு புள்ளிகள் என்பன கணிப்பிடப்பட்டன. According to the results of DF, RS, CFU மற்றும் PAS மதிப்பீட்டின் அடிப்படையில் சகல பாரம்பரிய வர்க்கங்களும் கட்டுப்பாட்டு வர்க்கத்தினை விடவும் குறிப்பிடத்தக்க அளவில் ($p<0.05$) அதிகமாயிருந்தது. களுஹீனெட்டி வர்க்கமானது குறிப்படத்தக்களவில் ($p<0.05$) 6.97±0.03% மற்றும் 2.53±0.02% என்ற அளவில் அதிக பெறுமானங்களை முறையே DF மற்றும் RS என்பவற்றிற்கு கொண்டிருந்தது.



CFU பெறுமானமானது 1.87±0.04x107 இலிருந்து 2.58±0.05 x107 வரை வேறுபட்ட பெறுமானங்களை காட்டியது. அதிகூடிய CFU ஆனது களுஹீனெட்டி வர்க்கத்தில் அவதானிக்கப்பட்து. PAS பெறுமானமானது 1.23±0.01 இலிருந்து 1.46±0.02 வரை வேறுபட்ட பெறுமானங்களை காட்டியது. களுஹீனெட்டி வர்க்கமானது இதர பாரம்பரிய வர்க்கங்கங்களை விடவும் ஒப்பீட்டளவில குறிப்படத்தக்களவில் ($p<0.05$) அதிக பெறுமானத்தை காட்டியது. அதிக பெறுமானத்தை கொண்டிருந்த இரண்டு அரிசி இனங்களை பாவித்து இட்லி கலவை உருவாக்கப்பட்டது.இதில் சிறந்த கலவையானது உணர்வு மதிப்பீட்டின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டது. 1:1 விகிதத்தில் கலக்கப்பட்ட களுஹீனெட்டி மற்றும் சுகந்தெல் கலவையானது சிறப்பானதாக தெரிவுசெய்யப்பட்டது. அதியுயர் PAS பெறுமானத்தை கொண்டிருந்ததன் நிமித்தம் அது சிறப்பான பிரிபயோட்டிக் அம்சத்தை ஏனைய வர்க்கங்களை விடவும் அதிகமாக கொண்டிருந்தது. எனவே இது குடலில் புரோபயோட்டிக் றுண்ணுயிர்களின் வளர்ச்சியையும் செயற்பாட்டையும் மேம்படுத்துவதன் மூலம் நுகர்வோரின் குடல் சுகாதாரத்தை மேம்படுத்தும்.

3. கருத்தகொழும்பான் மாம்பழத்தின் அறுவடைக்கு பிந்திய தரம் மற்றும் சுயவாழ்வு காலத்தை அதிகரித்தல் ஆகிய செயற்பாடுகளில் முற்பரிகரணங்களின் செல்வாக்கு

மா *(Mangifera indica* L.) இலங்கையின் பிரதானமான பழப்பயிராகும். எனினும் தொடர்ச்சியான பழுத்தல் செயன்முறையினால் அதன் சுய வாழ்வுக் காலம் மிக குறைவானதாகும். இதனால் அதனுடைய வினைத்திறனான கையாளல் மற்றும் கொண்டுசெல்லல் செயற்பாடுகளில் பல பாதகமான விடயங்கள் உள்ளன். எனவே மாம்பழங்களின் களஞ்சிய வாழ்நாளை அதிகரிப்பதற்கான தொழிநுட்ப பாவனையின் தேவைப்பாடும் உள்ளதோடு அவற்றினை

நியமம்படுத்த வேண்டிய தேவைப்பாடும் உள்ளது. பழங்களின் அறுவடைக்கு பிந்திய சிதைவினை குறைப்பதற்கும் பழுத்தலை தாமதப்படுத்தவும் மாற்றுபாயமாக இயற்கையான பதார்த்தங்களை பாவிக்கும் தேவைப்பாடு அதிகரித்துள்ளது. உண்ணக்கூடிய மேற்பூச்சானது தடுப்பாகவும், சூழலுக்கும் பழங்களுக்கும் இடையில் வாயு பரிமாற்றத்தினை குறைப்பதன் மூலம் மாற்றியமைக்கப்பட்ட உள்ளக வளி சூழலை (அதிக காபனீரெக்சைட்டு குறைந்த ஒக்சிஜனை) கொண்டதாகவும் நீரிழப்பை குறைப்பதாகவும் உள்ளது. உண்ணக்கூடிய மேற்பூச்சானது பழங்களின் தரத்தை பேணுவதற்கான அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவ கருவியாகவும் சிதைவடையாத பொதியிடும் பதார்த்தங்களை குறைப்பதற்கும் உதவுகின்றது. இப்பின்னனியில், மாங்காய்களின் சுயவாழ்வு காலத்தை அதிகரிப்பதற்கான ஆராய்ச்சியானது திட்டமிடப்பட்டது. இதில் உண்ணக்கூடிய மெழுகு மேற்பூச்சு, உயிரியல் மெழுகு, கைட்டோசன் பூச்சு மற்றும் கம் அரபிக் என்பன அறுவடைக்கு பிந்திய பரிகரணங்களாக கருத்தகொழும்பான் மாங்காய்களில் பாவிக்கப்பட்டன. இந்த மெழுகுப்படைகளின் மூலம் தரபாதிப்பின்றி மாங்காய்களின் சுய வாழ்வு காலத்தை அதிகரிக்க முடியும் என்பது கண்டறிப்பட்டது. இந்த மெழுகு படையானது இலகுவாக தூய நீரில் கலக்கப்பட்ட மெழுகுப் படை கலவையில் பழங்களை அமிழ்த்துவதன் மூலம் இலகுவாக உருவாக்கப்படலாம்.



4. கருவா எண்ணெய் (*Cinnamon Zeylanicum*), சாதிக்காய் எண்ணெய் (*Myristica Sp.*) என்பவற்றை பாவித்து உணவை பதப்படுத்தி பாதுகாப்பதற்கான உணவு சேர்க்கையை உருவாக்குதல் (*Myristica Sp.*)

இந்த ஆராய்ச்சியானது செயற்கையான உணவை பாதுகாக்கும் பொருட்களுக்கு மாற்றாக இயற்கையான உணவு பாதுகாக்கும் பதார்த்தமொன்றை கருவா மற்ம் சாதிக்காய் விதைகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் எண்ணெய்களின் மூலம் உருவாக்கும் நோக்கத்துடன் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்காக தக்காளி சோஸ் உணவு பொருளாக பாவிக்கப்பட்டது. தக்காளி சோஸ் ஆனது உள்ளூர் தக்காளிகளின் (*Lycopersicon esculentum L.*) மூலம் SLS 260:1989 நியமத்திற்கு அமைவாக தயரிக்கப்பட்டது. இதற்காக பிளாட்டினம் வர்க்கம் பாவிக்கப்பட்டது. மேற்படி எண்ணெய்களானது வெவ்வேறு செறிவுகளில் புதிதாக தயாரிக்கப்பட்ட தக்காளி சோஸ்களில கலக்கப்பட்டு உணர்திறன் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டிருந்தன. சாதிக்காயெண்ணெய் கலக்கப்பட்ட மாதிரி அதிகம் விரும்பப்படதாக இருந்தது. நுண்ணுயிர் எதிர் ஆற்றல் பரிசோதிக்கப்பட்டபோது சாதிக்காயெண்ணெய் கலக்கப்பட்ட மாதிரி அதிக நுண்ணுயிர் எதிர்ப்பு ஆற்றலை கொண்டிருந்தது. ஒரு மாத கால களஞ்சியத்தின்போது கட்டுப்பாட்டு மாதிரியும் நல்ல நிலையில் காணப்பட்டது. சோதனையின் அடிப்படையில் இயற்கையான சேர்வைகள் உருவாக்கப்பட்டு நுண்ணுயிர் எதிர்ப்பாற்றல் மற்றும் புலணுணர்வு சோதனை என்பன நடைபெற்றுக்கொண்டுள்ளன. உருவாக்கப்பட்டுள்ள உணவு பாதுகாக்கும் பதார்த்தம் சேர்க்கப்பட்ட தக்காளி சோஸினது சுயவாழ்வுக்கால பரிசோனை தொடர்கின்றது. பௌதிக இரசாயன பண்புகள் மற்றும் நுண்ணுயிரியல் ஆய்வுகளின் அடிப்படையில் இந்த உற்பத்தியானது நான்கு மாதங்களுக்கு நுகர்வுக்கு பாதுகாப்பானது.




உருவாக்கப்பட்ட உணவு சேர்க்கையை கொண்ட தக்காளி சோஸின் புலணுணர்வு சோதனை

5. உடன் அறுவடை செய்யப்பட்ட மாங்காய்களை குளிர்விப்பதற்கான வலிந்த காற்று குளிராக்கி வடிவமைத்தலும் உற்பத்தியும்

ஆரோக்கியமான வாழ்வுக்கும் போசாக்கான உயவினை பெற்றுக்கொள்ளவும் உடன் (புதிய) மரக்கறிகள் மற்றும் பழங்கள் மிக முக்கியமானவையாகும். மாம்பழங்கள் 20 வேறுபட்ட வகையான விட்டமின்கள், கனியுப்புக்கள், நார்ச்சத்து மற்றும் பொலிபீனோலிக் நிறமி ஒக்சியேற்ற எதிரிகள் என்பவற்றை கொண்டுள்ளன. அத்துடன் இது கொழுப்பு, சோடியம் மற்றும் கொலஸ்திரோல் என்பவற்றை கொண்டிராதது. இலங்கையில் அறுவடைக்கு பின்னர் மாம்பழங்களில் ஏற்படும் இழப்பானது 30-35% ஆக காணப்படுகின்றது. எனவே உடன் மாம்பழங்களின் தரம் மற்றும் பாதுகாப்பை பேணுதல் மிகமுக்கியமானது. அத்துடன் அறுவடைக்கு பின்னான இழப்பினை குறைப்பதன் மூலம் விலைத்தளம்பல்களை கட்டுப்படுத்துவதற்கும் வருடம் முழுவதும் சந்தைகளில் மாம்பழங்களின் இருப்பை பேணுவதற்கும் தரம்பேணல் மிக முக்கியமானதாகும்.

உடன் பழங்களின் சுயவாழ்வு காலம் மற்றும் தரத்தினை பாதிக்கும் குறிப்பிடத்தக்க மிக முக்கிமான காரணி வெப்பநிலையாகும். தொடர்ச்சியானதும் சீரானதுமான குளிர்வித்தல் செயன்முறையானது பழங்களின் சுவாச வீதம் மற்றும் ஏனைய உயிர்ச் செயற்பாடுகளை குறைப்பதன் மூலம் அவரின் வாழ்வு காலத்தை அதிகரிக்கின்றது. அத்துடன் வெப்பநிலை குறைக்கப்படும்போது அது எதிலீன் உற்பத்தி, நீரிழப்பு என்பவற்றை குறைப்பதோடு சில நுண்ணுயிரிகளின் வளர்ச்சியை தடுக்கவும் செய்கின்றது. முற்குளிராக்கல் செயற்பாடானது, அறுவடை செய்யப்பட்ட பழங்களை வெகு விரைவாக அவற்றின் புலவெப்பத்தை (field heat) அகற்றுவதை குறிக்கின்றது. இது பல்வேறு குளிருட்டல் முறைகளினூடாக செய்யப்படகூடியதாகும். உதாரணமாக, அறை குளிர்வித்தல், வலிய காற்றின் மூலமான குளிர்வித்தல், திரவ குளிரூட்டல், மேற்பரப்பு பனிப்படலமிடல் மற்றும் வெற்றிட குளிரூட்டல் என்பவற்றை குறிப்பிடலாம்.



வலிந்த காற்று குளிரூட்டல் செயன்முறையில் குளிர்ந்த வலிய காற்றானது சகல பொருட்களிலும் படக்கூடியதாக அனுப்பப்படுவதன் மூலம் செயற்படுத்தப்படுகின்றது. ஆகவே, இந்த ஆய்வினூடாக நாம் மாம்பழங்களின் புலவெப்பத்தை அகற்றுவதற்கு குறைந்த செலவுடைய குழாய்வடிவ வலிந்த காற்று குளிராக்கியினை வடிவமைத்து உருவாக்க உத்தேசித்துள்ளோம். இதன் மூலமாக மாம்பழங்களின் வாழ்வுகாலத்தையும் தரத்தையும் அதிகரிப்பதன் மூலம் அவற்றின் அறுவடைக்கு பிந்திய இழப்பை குறைக்கக்கூடியதாக இருக்கும். 40% மான ஆய்வுப் பணிகள் இவ்வாராய்ச்சியில் முடிவடைந்துள்ளன.

6. மரக்கறிகளின் உறைநிலை பதப்படுத்தல் செயன்முறையை மேம்படுத்தல் (கரட், போஞ்சி, பீட் றூட்)

மரக்கறிகளின் அதி உற்பத்தி காலப்பகுதியில் ஏற்படும் அதிகூடிய அறுவடைக்கு பின்னான இழப்பு இலங்கையில் பாரிய பிரச்சினையாக நீண்டகாலமாக உள்ளது. இவ்விழப்பு 30-40 வீதமாக உள்ளது. மரக்கறிகளின் "மிகையுற்பத்தி"யானது சந்தையில் நிலவுகின்ற வழங்கல் மற்றும் கேள்விக்கிடையில் ஒரு சமநிலைத்தளம்பலை ஏற்படுத்துகின்றது. இது அதிகூடிய அறுவடைக்கு பின்னான இழப்பிற்கு முக்கிய காரணியாக அமைகின்றது. சில தனி நபர்கள் அல்லது குழுக்கள் நுகர்வோரின் கேள்விக்கு மேற்பட்ட உற்பத்தியை பதப்படுத்தும்


செயற்பாடுகளில் ஈடுபடுகின்றபோதிலும் பெரும்பாலான பாரிய, நடுத்தர விவசாயிகள், தொழில் முயற்சியாளர்கள் இது தொடர்பில் போதிய கவனத்தினை செலுத்துவதில்லை. இதற்கு முக்கிய காரணமாக போதிய தொழிநுட்ப விடயங்களை அவர்களது தொழிலில் புகுத்துவதற்கான வசதியின்மை, புற நபர்களிடம் அல்லது உரிய நபர்களிடம் இருந்து போதிய தொழில்நுட்ப உதவி கிடைக்காமை என்பவற்றை குிப்பிடலாம். இருப்பினும் குறிப்பிடத்தக்க தனிநபர்கள் பல்வேறு பதப்படுத்தல செயற்பாடுகளின் பின் மரக்கறிகளை ஏற்றுமதி செய்கின்றனர். உறைநிலை பதப்படுத்தல் தொழில்நுட்பத்திற்கு ஏற்றுமதி சந்தையில் அதிக தேவைப்பாடு உள்ளமையினாலும் வளர்ந்து வரும் இலங்கையின் பொருளாதார சூழலினால் மக்களின் வாழ்க்கை முறையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தினாலும் உறை நிலை பதப்படுத்தல் தொழில்நுட்ப பாவனைக்கு அதிக சாத்தியப்பாடு உள்ளமையினாலும் மேற்கூறப்பட்ட விடயங்களையும் பங்காளர் கலந்துரையாடலையும் அடிப்படையாகக்கொண்டு அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவ நிறுவனமானது உறைநிலை பதப்படுத்தல் செயல்நுட்பத்தை (கரட், போஞ்சி, பீட் றூட்) மேம்படுத்துவதற்கான ஆராய்ச்சியொன்றினை முன்னெடுப்பதற்கு திட்டமிட்டது. இருப்பினும் வாழ்க்கை செலவினை கருத்திற்கொள்ளும்போது இறுதி உற்பத்தியின் சந்தை விலையினை நியாயமான விலையில் வைத்திருக்கவேண்டிய தேவைப்பாடு உள்ளது. எனவே உற்பத்திச் செலவினை குறைப்பதற்காக உறைநிலை பதப்படுத்தல் செயன்முறை நியதிகளை மேம்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டது.

இத்திட்டம் 01.04.2018 அன்று தொடங்கப்பட்டு 28.02.2020. வரை தொடர்வதற்கு திட்டமிடப்பட்டது. சாதாரன உறைதல் செயற்பாட்டின் மூலம் உறைவிக்கப்பட்ட மாதிரிகளின் தர அளவீடுகளை பரிசோதனை செய்யும் நிலை வரை நிறைவு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் அதி உறை குளிர்வித்தல் முறையினை செயற்படுத்துவதற்கு போதிய நிதியின்மையினாலும் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறுகளினாலும் ஆராய்ச்சி ஆலோசனைக் குழுவின் பரிந்துரைக்கமைய இவ்வாராய்ச்சியானது இடைநிறுத்தப்பட்டது.

7. மாம்பழங்களின் வழங்கல் வலையமைப்பினை அடையாளப்படுத்தல் ஊடாக மேம்படுத்துவதற்காக புவிசார் நிலையிடல் கருவிகளை பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூற்று ஆய்வு: ஓமாரகொல்ல மாம்பழ சேகரிப்பாளர் குழுவினை அடிப்படையாக கொண்ட கற்றல்

உலகளவில் பாதுகாப்பான உணவு தொடர்பில் அதிகரித்து வரும் கவனத்தினால் உணவினை வினைத்திறனாக அடையாளப்படுத்தும் முறைகளுக்கு கேள்வி அதிகரித்து வருகின்றது. தொழிநுட்ப முன்னேற்றத்தினால் புவிசார் அடையாளப்படுத்தல் முறையானது உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் உற்பத்தியின் தொடக்கமும் வழங்கல் வலையமைப்பில் அவற்றின் அசைவையும் தொடர்ந்து அவதானிக்கக்கூடியதாக உள்ளது. கருத்தகொழும்பான் மாம்பழமானது மிக முக்கியமான கேள்வி கூடிய பழமாக உள்ளதோடு அதிகளவில் தரப்பாதிப்பையும் கொண்டதாக உள்ளது. எனவே அதன் வழங்கல் வலையமைப்பின் நிகழ்நேர கண்காணிப்பானது பாதிப்பு ஏற்படும் இடங்களை அடையாளப்படுத்தல் அதற்கான காரணத்தை அறிதல் போன்ற செயற்பாடுகளக்கு முக்கியமானதாகும். இந்த ஆய்வானது புவி தகவல் முறையினை பாவிப்பதனூடாக தெரிவுசெய்யப்பட்ட மாம்பழ வலையமைப்பினை அடையாளப்படுத்துவதன் மூலம் அம்முறையின் தொடர்ச்சியான பாவனைக்கான சாத்தியக்கூற்றை அறிந்து கொள்வதற்கானதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

புவி தரவுதளம் ஒன்று சகல அமைவிட தகவல்களையும் தனிப்பட்ட தகவல்களையும் உள்ளடக்கியதாக உருவாக்கப்பட்டது. பின் விவசாயி தொடக்கம் சில்லறை விற்பனையாளர் வரை மாம்பழங்களின் பயணப்பாதையானது கையடக்க கண்காணிப்பு மென்பொருளின் உதவியுடன் கண்காணிக்கப்பட்டது. இது அமைவிடம் மற்றும் வழங்கல் வலையமைப்பின்



உறுப்பினரின் நேரம் என்பவற்றை கண்காணிப்பதற்கான இயல்தகவுடையது. அத்துடன், தெரிவுசெய்யப்பட்ட வலையமைப்பில் தேவையற்ற பயணம் மற்றும் காலதாமதம் என்பனவும் அறிந்துகொள்ளப்பட்டன. கண்காணிப்பு தரவுகளை அடிப்படையாககொண்டு பயண வேகம் மதிப்பிடப்பட்டது. இந்த தரவானது வாகன நெரிசல் பகுதி மற்றும் இதர காலதாமதங்களை அறிவதில் முக்கியமானதாகும்.

சாத்தியப்பாட்டு ஆய்வின் அடிப்படையில் இம்முறையானது நிலையான வழங்கல் வலையமைப்பிற்கே பொருத்தமானதாகும். உதாரணமாக, சிறந்த விவசாய செயன்முறை உற்பத்திகள் (GAP), நிலையான ஏற்றுமதிக்கான உற்பத்திகள். கருத்தகொழும்பான் மாம்பழ வலையமைப்பிற்கு இம்முறையானது அதன் மாறும் மற்றும் நிலையற்ற சேகரிப்பின் காரணமாக பொருத்தமற்றதாகும்.

8. தாமரைப்பூவின் அறுவடைக்கு பிந்திய வாழ்வு காலம் மற்றும் அதன தரத்தை மேம்படுத்துவதற்கான மூலோபாயங்களை கண்டறிதலும் அவற்றை மேம்படுத்தலும்

இலங்கையின் உலர் வலயத்தில் தாமரைப் பூக்கள் பரந்துபட்டு காணப்படுகின்றன. அநுராதபுரமானது அதன் பரந்துபட்ட நீர் நிலைகளின் காரணமாக தாமரைப் பூக்களின் முக்கியமான உற்பத்தி பகுதிகளில் ஒன்றாகும். கிராமிய மக்கள் வெட்டிய தாமரைப் பூ வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளபோதிலும் அதன் குறைந்த வாழ்வு காலத்தினால் பாரிய இழப்பினை சந்திக்கின்றனர். அதனால் போதிய வருமானத்தினை ஈட்ட முடியாமல் உள்ளனர். இந்த துறையின் முக்கிய பிரச்சனையானது பொருத்தமற் கையாளலினால் குறைவடையும் அறுவடைக்கு பிந்திய வாழ்வு காலமேயாகும். முன்மொழியப்பட்டுள்ள இந்த செயன்முறையானது வெட்டிய தாமரைப் பூக்களின் தரத்தையும் வாழ்வு காலத்தையும் அதிகரிப்பதற்கான செயன்முறை தொகுதிகளை உருவாக்குவதை நோக்கமாக கொண்டுள்ளது. இதன் நேரடி பயனாளர்கள் ஈத்தொழிலில் ஈடுபடும் மக்களாவர். அதேபோல் அதன் பாவனையாளர்கள் மறைமுக பயனாளர்களாகவும் இத்திட்டத்தில்உள்ளனர். இவ்வாய்வின் வெளிப்பாடானது பூ பறிப்பவர்கள், சேகரிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கு உதவுவதோடு தாமரைப்பூவின தரத்தையும் வாழ்வு காலத்தையும் மேம்படுத்த உதவும். அத்துடன் இது அவர்களின வருமானத்தை அதிகரிக்கவும் உதவும்.

தாமரை (*Nelumbonucifera*) பூக்கள் அநுராதபுத்தில் இவ்வாய்விற்காக சேகரிக்கப்பட்டன. பின்வரும் மூன்று விதமான பரிசோதனைகள செய்யப்பட்டன. முதல் பரிசோதனையானது சரியான முதிர்வு நிலையினை அறிவதற்கும் பறிப்பதற்கான நாளின் சரியான நேரத்தை கண்டறிவதற்காகவும் செய்யப்பட்டது. மூன்று வகையான முதிர்வு நிலைகளிலும் மூன்று வேறுபட்ட நேரங்களிலும் பறிக்கப்பட்டன. அதிகாலை நேரம் பறிப்பதற்கான சிறந்த நேரமாகும். அத்துடன் பொருத்தமான முதிர்வு நிலையானது மலர்வதற்கு முந்தைய தினத்தில் உள்ள மொட்டு பருவமாகும். இரண்டாவது பரிசேதனையானது, சிறந்த அறுவடை முறை மற்றும் சிறந்த பொதியிடும் முறை என்பவற்றை கண்டறிவதற்கானதாகும். மூன்று வெவ்வேறு முறைகளில் பறிக்கப்பட்டு பொதியிடப்பட்ட பூக்கள் மிக விரைவாக ஆய்வுகூடத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. மூன்றாவது பரிசோதனையானது, சிறந்த பாதுகாக்கும் கரைசலையும் களஞ்சிய நிலையையும் கண்டறிவதற்காக ஒரே நேரத்தில் செய்யப்பட்டதாகும். பூக்களின் தண்டானது பாதுகாக்கும் கரைசலில் வைக்கப்பட்டு கட்டுப்படுத்தப்பட்ட வெப்பநிலையிலும் சூழல் வெப்பநிலையிலும் வைக்கப்பட்டன.


9. இலங்கையில் களஞ்சியப்படுத்தப்பட்ட சோளத்தினை பாதிக்கும் பூச்சிகளிலும் சோளத்தின் தரத்திலும் சித்ரனெல்லா*(Cymbopogon nardus)* புல் இலை பிரித்தெடுப்பின் தாக்கம்

இலங்கை சோள உற்பத்தியாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் பாவனையாளர்கள் மத்தியில் சோத்தினை தாக்கும் வண்டானது(*Sitophilus zeamaize)* அதீத கவனத்தை பெற்றதாக உள்ளது. சுகாதாரம் தொடர்பில அதிகரித்து வரும் விழிப்புணர்வின் காரணமாகவும் சூழலில் செயற்கை (இரசாயன) பூச்சிநாசினிகள் ஏற்படுத்தும் தாக்கம் காரணமாகவும் அதற்கு மாற்றான பூச்சி கட்டுப்பாட்டு உத்திகளின் தேவை அதிகரித்து வருகின்றது. தாவர பிரித்தெடுப்புக்கள் அத்தியாவசிய எண்ணெய்கள் போன்றன சாத்தியமான மாற்றீடாக கருதப்படுகின்றன. இதன அடிப்படையில் சித்ரனெல்லா*(Cymbopogon nardus)* புல் *S. zeamaize* வண்டுகளை கட்டுப்படுத்த சாத்தயமான தாவர இனமாக அடையாளம் காணப்பட்டது.

இந்த ஆராய்ச்சியானது சோளத்தினை பாதிக்கும் வண்டான S. *zeamaize இனை* கட்டுப்படுத்துவதில் சித்ரனெல்லா புல் இலை திரவ பிரித்தெடுப்பின் செயல்திறனை மதிப்பிடுவதை நோக்கமாக கொண்டு வடிவமைக்கப்பட்டது. ஆய்வுகூட மட்டத்திலான உயிர் சோதனைக்காக விருப்ப தெரிவு பகுதிகளில் வண்டுகளை தூரத்தும் சோதனைக்காக வெவ்வேறு செறிவுகளை கொண்ட இலை பிரித்தெடுப்பு திரவங்கள் பாவிக்கப்படத்தக்கதாக 5 வகையான பரிசோதனைகள் திட்டமிப்பட்டன. அவையாவன, 15, 20, 50, 100µl/ml ஆகிய செறிவுகளாகும். அத்துடன் கட்டுப்பாட்டு சோதனைக்காக சுத்தமான (காய்ச்சி வடிகட்டிய) நீரும் பாவிக்கப்பட்டது. பூச்சிகளை விரட்டும் குறியீடு உருவாக்கப்பட்டு கூடிய விரட்டும் குறியீட்டினை கொண்ட மூன்று செறிவுகள் (20, 50, 100µl/ml) தெரிவுசெய்யப்பட்டன. அவற்றுடன் வடிகட்டிய நீரும் களஞ்சிய சோதனைக்காக பாவிக்கப்பட்டன. சோதனை முடிவுகளன்படி சகல சோதனை சிகிச்சைகளிலும் பூச்சி பாதிப்புகள் குறிப்பிடக்கூடிய அளவில் ($P<0.05$) இருந்தன. அத்துடன் களஞ்சிய காலத்துடன் குறிப்பிடக்கூடியளவில் அவை அதிகரித்துமிருந்தது. மேலும், ஒரு மாதம். இரண்டு மாதம் மற்றும் மூன்று மாதம் எனும் களஞ்சிய காலப்பகுதியல் பூச்சிகளின் தாக்கத்தால் ஏற்படும் நிறையிழப்பானது எந்தவொரு சோதனை சிகிச்சை முறைகளுக்குமிடையிலேயும் குறிப்பிடக்கூடியளவில் ($P<0.05$) வித்தியாசம் இல்லை என்பதனையும் சோதனைகள் வெளிப்படுத்தின. இதனால் தெரிவு செய்யப்பட்ட சித்ரனெல்லா புல் இலை திரவ பிரித்தெடுப்பின் செறிவுகள் சோள வண்டுகளை கட்டுப்படுத்துவதில் வினைத்திறனாக இல்லை எனும் முடிவு மேற்கொள்ளப்பட்டது. இதற்கு சித்ரனெல்லா புல் இலை திரவ பிரித்தெடுப்பில் அதிகளவில் வரைவாக ஆவியாகக்கூடிய பதார்த்தங்கள் உள்ளமை காரணமாக இருக்கலாம். எனவே எதிர்கால ஆராய்ச்சிகளில் மெதுவாக ஆவியாகக்கூடிய பொறிமுறையொன்றுடன் இணைக்கப்பட்டு இந்த ஆராய்ச்சி முன்னெடுக்கப்படலாம்.

10. பழங்களின் முதிர்வுநிலையை அறிவதற்கான குறைந்த செலவில் விம்பசெயலாக்கி உபகரணம் ஒன்றை வடிவமைத்தலும் மேம்படுத்தலும்


மரக்கறி பழங்களை தொடர்ச்சியாக உணவாக உள்ளெடுப்பதினால் ஏற்படும் உடல் நலத்தின்கண் பாவனையாளர்களுக்கு அதிகரித்து வரும் விழிப்புணர்வு நிமித்தமாக சந்தைகளில் அவற்றின் கேள்வி அதிகரித்து வருகின்றது. உயர் தரமான உற்பத்திகளை பெற்றுக்கொள்வதில் முதிர்வு நிலையானது முக்கிய காரணியாக விளங்குகிறது. ஏனெனில், முதிர்வு நிலையே உப்பத்தியின் போசனை நிலையினையும் அதன் இயற்கையான பழுக்கும் ஆற்றலையும் தீர்மானிக்கும் சக்தியாக விளங்குகின்றது.
டிஜிற்றல் விம்பத்தினை அடிப்படையாக கொண்டு பழத்தின் வர்ணத்தை கண்டறிந்து மதிப்பிடக்கூடிய கணினி வாசக முறைமை உருவாக்கப்பட்டது. இதுவரை விம்ப செயலாக்க முறையில் இவ்வான பல்வேறு ஆராய்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன. இது மிக இலகுவானதாகவும் நம்பிக்கையானதாகவும் உற்பத்திகளுக்கு எவ்விதமான பாதிப்புக்களையும் ஏ்படுத்தாததாகவும்


உள்ளது. எனவே இம்முறையானது அப்பிள், சித்ரசு பழங்கள், பீச், முந்திரிகை மற்றும் மாம்பழங்கள் உட்பட பல்வேறு பழங்களில் சோதிக்கப்பட்டுள்ளன. எனவே, இந்த ஆராய்ச்சியானது, பழங்களின் முதிர்வுநிலையை அறிவதற்கான விம்பசெயலாக்கி உபகரணம் ஒன்றை வடிவமைத்தல் மற்றும் மேம்படுத்தலை நோக்காக கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. TJC மாம்பழங்களானது சேகரிக்கப்பட்டு தேவையான பௌதிக மற்றும் இரசாயன இயல்புகளை (பழத்தின் வர்ணத்தின் அளவு, Tss, brix ,PH, TA, பச்சையம், நீளம், அகலம், கனவளவு, நிறை,சாரடர்த்தி) அறிவதற்காக பாவிக்கப்பட்டன. புள்ளிவிபர மாதிரியானது Statistical SPSS 16.0 இனை பாவித்து உருவாக்கப்பட்டது. சகல இரசாயன இயல்புகளிற்கும் உயர் R^2 பெறுமானமானது பல்நேரியல் கணித வெளிப்பாடுகள் (Multi Linear mathematical expressions) மூலம் பெறப்பட்டது.


TJC மாம்பழங்களின் நிற அளவு பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர், புள்ளிவிபர மாதிரியானது பௌதிக மற்றும் இரசாயன இயல்புகளை தீர்மானிப்பதற்கு பாவிக்கப்பட்டது. இவ்வுபகரணத்தை வடிவமைப்பதற்கான பிரதானமாக பாவிக்கப்பட்டவை கீழே படத்தில் காட்டப்பட்டுள்ளன.

Components of the Instrument



11. ஒட்சியேற்ற எதிர் செயற்பாடு அதிகரிக்கப்பட்ட அவரை (Legume) இன அல்வா (granular bar)

ஒட்சியேற்ற அழுத்தத்தினால் உருவாக்கப்படும் இயங்கு அயனிகளால்(Free radicals) பல்வேறுபட்ட உடல் நல பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. விசேடமாக, ஹைப்பர் கிளைசீமியா போன்ற நிலைமைகளின் கீழ் இயங்கு அயனிகளின் அளவு உடலில் அதிகரிக்கின்றது. இந்த மேலதிகமான இயங்கு அயனிகள் உடலின் மிக முக்கியமான உறுப்புகளின் கலங்களை பாதிக்கின்றன. (பெரிய மற்றும் நுண் குருதிக்குழாய்களின் செயல் பிறழ்வு, சிறுநீரக செயலிழப்பு, விழித்திரை நோய்கள்). சரியான உடலியக்க செயற்பாடுகளுக்கு ஒட்சியேற்ற எதிரிகளும் இயங்கு அயனிகளும் சரியான அளவில் இருப்பது முக்கியமானதாகும். எனவே இந்த ஆராய்சிசயின் நோக்கமானது, ஒட்சியேற்ற எதிர் செயற்பாடுகளுடன் துணை உணவுப் பொருளாக அவரை இன அல்வா தயாரிப்பதாகும். இந்த அல்வாவானது, உள்ளூர் உற்பத்திகளான பயறு, நிலக்கடலை, எள்ளு, அரிசி, வாசனைத் திரவியங்கள் மற்றும் ஒட்சியேற்ற எதிரிகளை உள்ளடக்குவதற்காக பசுந்தேயிலை உற்பத்தியின் போதான மிகுதி ஆகியவற்றை கலந்து அதேவேளை எதுவிதமான சீனியோ சீனி உற்பத்தியோ சேர்க்கப்படாது தயாரிக்கப்பட்டது. இந்த உற்பத்தியானது புலனுணர்வு சோதனையில் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதாக உள்ளதோடு சிறந்த போசனை கலவையையும் கொண்டமைந்துள்ளது. பொருத்தமான பொதி செய்யும் பதார்த்தங்களில்



பொதியிடுவதன் (double laminated or triple laminated) மூலம் இந்த உற்பத்தியானது 6 மாத காலத்திற்கு பாதுகாப்பாக வைத்திருக்கலாம் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனை குறை குருதி சர்க்கரை நிலையுடையவர்களுக்கு துணை உணவாக பாவிக்கலாம். இதன் மூலம் ஒட்சியேற்றத்தின் மூலமான தகைப்பிலிருந்து அவர்களை விடுவிக்கலாம்.

12. புதிய பழங்களை பாதுகாப்பதற்கான உறைநிலை உலர்த்தல் மற்றும் வெற்றிட பொதியிடல் தொழிநுட்பத்தின் வினைத்திறனை சோதித்தல் (பப்பாசி, கொய்யா, அன்னாசி)

உறைநிலை உலர்த்தல் என்பது மரக்கறி, பழங்களின் வாழ்வு காலத்தை அதிகரிக்க உதவும் ஒரு முறையாகும். இம்முறையின் மூலமாக பாதுகாக்கப்படும் உணவினது பொசனை உள்ளடக்கங்கள் எதுவிதமான பாதிப்பபுக்களுக்கும் உள்ளாகுவதில்லை அல்லது மிகக் குறைவான பாதிப்பினையே கொண்டிருக்கும்

பப்பாசி (ரெட் லேடி வர்க்கம்), அன்னாசி (மொரிசியஸ் வர்க்கம்) என்பவற்றின் பெரிதும் உகந்த முதிர்வு நிலையை அடைவதற்கான பரிசோதனையும் கொய்யாவின் (அப்பிள் கொய்யா வர்க்கம்)அன்ரிபுரெளனிங் சிகிச்சை முறையினை அறிவதற்கான பரிசோதனையும் நடத்தப்பட்டன. இதன் மூலம், பப்பாசியின் உலர்த்தலுக்கான மீஉகந்த முதிர்வு நிலையாக அறுவடை செய்து மூன்றாவது நாள் ($P>0.05$) அடையாளப்படுத்தப்பட்டது. இந்த நிலையில் பப்பாசியில் தோலின் நிறப் பெறுமானமானது 61.76 ± 1.45 (L*), 5.45 ± 0.86 (a*), 52.58 ± 1.83 (b*) ஆகவும், உறுதி தன்மையானது 67.80 ± 2.08 N ஆகவும், மொத்த கரையக்கூடிய கனியங்களின் அளவானது 11.13 ± 0.21 ஆகவும் pH பெறுமானமானது 4.81 ± 0.22 ஆகவும் காணப்பட்டன. அன்னாசியின் உலர்த்தலுக்காக நுகர்வாளர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய உகந்த முதிர்வு நிலையானது 75% நிறமாற்றத்திற்கு உட்பட்ட நிலை ($P<0.05$). அடையாளப்படுத்தப்பட்டது. இந்த நிலையில் பிரிக்ஸ் பெறுமதி 17.10 ± 0.76, pH பெறுமதி value was 3.67 ± 0.04 ஆகவும், கணிப்பிடக்கூடிய அமிலம் 0.80 ± 0.02 ஆகவும், உறுதி தன்மையானது 12.76 ± 1.13 N ஆகவும் இருந்தது. கொய்யவின் மண்ணிறமடைதலை தடுக்கும் சீர்மையான சிகிச்சை முறையானது 0.3% சித்திரிக்கமில் கரைசலில்10 நிமிடம் ஊறவைத்து பின்னர் 60 ° C வெப்பநிலையில் 2 நிமிடங்கள் அவிக்கும் செயன்முறை தெரிவு செய்யப்பட்டது. . இருந்தபோதிலும் சித்திரிக்கமில் கரைசலில் ஊறவைக்காது 60 °Cவெப்பநிலையில் 2 நிமிடங்கள் அவிக்கும செயன்முறையும் திருப்தியான விளைவை காட்டியது. இந்த நிலையில், ஆராய்ச்சிக்காக வழங்கப்பட்ட உறைநிலை உலர்த்தியானது இயங்கு நிலையில் இல்லாமையினால் அது பொருத்தமற்றதாக நிறுவனத்தின் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் நிராகரிக்கப்பட்டமையினால் இவ்வாராய்ச்சியானது இடைநிறுத்தப்பட்டது. இதனடிப்படையில் ஆராய்ச்சி வழிகாட்டல் குழுவானது ஆராய்ச்சியை இடைநிறுத்தவும் அடிப்படை சோதனைகளில் கிடைத்த முடிவுகளை வெளியிடவும் பரிந்துரைத்தது.


2019ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட புதிய ஆராய்ச்சி செயற்திட்டங்கள் (2020ஆம் ஆண்டிலும் தொடர்பவை)

1. அறுவடைக்கு பிந்திய விரும்பத்தகாத இயங்கு செயற்பாடுகளினை கட்டுப்படுத்துவதன் மூலம் புதிய தரமான இலை மரக்கறிகளின் (கீரை வகைகள்) தரத்தை மேம்படுத்தல்

அறுவடையின் பின்னர் இலை மரக்கறிகளின் ஆயட்காலமானது 2-3 நாட்களாகும். இலை மரக்கறிகள் போதியளவில் நார்ச்சத்துக்கள், கல்சியம், இரும்பு, பொஸ்பரசு உள்ளடங்கலாக கனியுப்புக்கள், விட்டமின்கள் (விசேடமாக C மற்றும் A), ஒட்சியேற்ற எதிரிகள்,பைட்டோகெமிக்கல்ஸ் மற்றும் இதர போசனைகளை கொண்டுள்ளன. இலை மரக்கறிகளினாது உணவாக உள்ளெடுக்கப்படும்போது அவை பல்வேறுபட்ட நாட்பட்ட

நோய்களுக்கு எதிர்மறையான தொடர்பினை காட்டுகின்றது. பல்வேறு இலை மரக்கறிகள் பாரம்பரிய மருத்துவத்திலும் அழகு சிகிச்சைகளிலும் பயன்படுத்தப்படுகின்றன.
இதனால், இலை மரக்கறிகள் உள்ளூர் மற்றும் ஏற்றுமதி சந்தைகளில் உயர் கேள்வியை கொண்டுள்ளன. ஏற்றுமதி சந்தைகளில் நிலவும் உயர் கேள்வியினால் அதிக ஏற்றுமதி வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

இலை மரக்கறிகள் அதிக போசனையையும் மருத்துவ பெறுமதியையும் கொண்டுள்ளபோதிலும் அறுவடைக்கு பிந்திய வாழ்வுக்காலமானது மிகக் குறைவானதாகும். தற்போதைய நிலையில் இலை மரக்கறிகளை புதிய நிலையிலேயே அதன் அறுவடைக்கு பிந்திய வாழ்வுக்காலத்தை அதிகரிப்பதற்கான உள்ளூர் மற்றும் ஏற்றுமதி சந்தைகளில் எதுவிதமான பொருத்தமான முறைகளும் இல்லாது காணப்படுகின்றது. எனவே தரத்தை பேணுவதிலும் வாழ்வு காலத்தை அதிகரிப்பதிலும் பாரிய இடைவெளி காண்படுகின்றது. எனவே இந்த ஆராய்ச்சியானது இந்த இடைவெளியை நிரப்புவதற்கானதாகவே இந்த ஆராய்ச்சி வடிவமைக்கப்பட்டுள்ளது.



பொன்னாங்கன்னி யின் வாழ்நாள் நீட்டிப்பு

2. புதிய நெல்லில் விரைவாக்கப்பட்ட வயதாதலை ஏற்படுத்துவதன் மூலம் அரிசியின் ஒட்டும் தன்மையை அகற்றி அதன் நுகர்வாளர் விருப்பத்தை மேம்படுத்தல்

கைத்தொழில் புரட்சியின் மூலம் உணவு தொழில் துறையின் சகல முயற்சியாளர்களுக்குமிடையே போட்டித்தன்மை அதிகரித்து வருகின்றது. பண்டைய மாந்தர்கள் உணவின் சுவையினை விடவும் போசாக்கின் தரமே முன்னிலைப்படுத்தப்பட்டது. ஆனால் தற்போதைய நிலையில் சுவையும் தோற்றமும் முக்கியமானதாக உள்ளன. இவை சந்தைப்படுத்தலின் முக்கிய ஆயுதமாகவும் உள்ளன. ஏனெனில் நுகர்வாளர்கள் உணவினை சுவை மற்றும் தோற்றத்தின் அடிப்படையிலேயே தரப்படுத்த முயற்சிக்கின்றனர். அரிசி தொழிற்றுறையிலும் இதே நிலையே நீடிக்கின்றது. அரிசியின் சமையல் தரமானது அதனது நுகர்வாளரது ஏற்றுக்கொள்ளும் தன்மை மற்றும் அவர்களை கவர்ந்திழுக்கும் ஆற்றலை கொண்டுள்ள முக்கியமான காரணிகளில் ஒன்றாகும். புதிய அரிசியானது சமைக்கப்படும்போது அதிகளவில் ஒட்டும் தன்மையை கொண்டுள்ளதோடு போதியளவில் சோற்றுப்பதத்தினை கொண்டிருப்பதுமில்லை. 3 – 4 மாதங்கள் களஞ்சியப்படுத்தப்பட்ட பின்னரான அரிசியே குறைந்த ஒட்டும் தன்மையுடனும் சரியான சோற்றுப் பதத்துடனும் காணப்படும். இம்வியற்கை மாற்றமானது அரிசியின வயதாதல் (aging of rice)எனப்படுகின்றது. அத்துடன் வயதான அரிசியானது அதிக கனவளவு அதிகரிப்பு விகிதம், நீர் உறிஞ்சும் அளவு என்பவற்றோடு குறைந்த அளவிலேயே சமைக்கப்படும்போது கனிமங்களை வெளியேற்றும். எனவே பெரும்பான்மையான பாவனையாளர்கள் வயதான அரிசியையே விரும்புகின்றனர்.

இந்நிகழ்வு இலங்கை அரிசியாலையாளர்களில் நேரடியாக செல்வாக்கு செலுத்துகின்றது. இலங்கையின் பெரும்பான்மையான அரிச அலைகள் சிறிய மற்றும் நடுத்தர ஆலைகளாகவே உள்ளன. எனவே இயற்கையான அரிசியின் வயதாதல் செயன்முறை நடைபெறுவதற்காக

நெல்லினை களஞ்சியப்படுத்துவதன் மூலம் மேலதிகமான செலவு இவர்களுக்கு ஏற்படுகின்றது. அதேசமயம், களஞ்சிய இடவசதி, பூச்சித் தாக்கம் மற்றும் அதிக செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு செலவு காரணமாக இது பொருளாதார ரீதியில் பொருத்தமற்றதாகவும் உள்ளது. தேசிய அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவ நிறுவனத்தின் பங்காளர் கலந்துரையாடலில் இது தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் எழுப்பப்பட்ட வேண்டுகொள்களுக்கமைவாக இந்த ஆராய்ச்சியானது, புதிதாக அறுவடை செய்யப்பட்ட நெல்லினை செயற்கை வயதாதல் செயன்முறைக்குட்படுத்தி அதன் மூலம் நுகர்வோர் ஏற்றுக்கொள்ளத்தக்கதான இயல்புகளுடன் அரிசியினை உருவாக்குவதனை நோக்காகக்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் இறுதி வெளியீடானது நிச்சயமாக அரிசி ஆலைகளில் இயற்கையான வயதாதல செயன்முறைக்காக களஞ்சியப்படுத்துவதினால் ஏற்படக்கூடிய அதிக செலவினை குறைக்கக்கூடியதாக இருக்கும். தற்போதைய நிலையில் இந்த செலவானது சராசரியாக ஒரு ஆலைக்கு ரூபா30 மில்லியனாக கணிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சியானது இரு வருடங்களுக்கானது. 01.07.2019 அன்று தொடங்கப்பட்ட இந்த ஆராய்ச்சி 31.06.2021 வரை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. தற்போது கொள்முதல் செயற்பாடுகள் மற்றும் தொடர்பான ஆராய்ச்சிகளில் இருந்து விடயங்களை பெற்றுக்கொள்ளும் செயன்முறை (Literature Review) என்பன இடப்பெற்று வருகின்றன. இதன் வெளியீடானது நிச்சயமாக விவசாயிகள், ஆலையாளர்கள் உட்பட இத்துறையுடன் தொடர்புடைய சகலருக்கும் பயனுடையதாகவிருப்பதோடு வைத்திருக்கும் செலவினை குறைப்பதன் மூலம் அதிக இலாபத்தையும் அவர்களுக்கு பெற்றுத்தருவதாக அமையும்.

3. சீதாப்பழத்தின் (*Annona muricata*) பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளின் போசனை மற்றும் மருத்துவ குணநலன்களை ஆய்ந்தறிதல்

உலகின் வெப்ப வலய மற்றும் இடை வெப்ப வலய பகுதிகளில் முக்கியமாக இலங்கை போன்ற வளர்ந்துவரும் நாடுகளில் பரவலாக காணப்படும் பழமாக உள்ளது. இலங்கையில் இந்த பழமானது அதிகளவில் பழப்பானமாக பயன்படுத்தப்படுகின்றது. ஆனால், இதன் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளுக்கான சாத்தியப்பாடு அதிகளவில் உள்ளது. இப்பழமானது அதிக போசனையானதாகவும் நிறைந்த உடல்நலன்களை வழங்குவதாகவும் உள்ளது.

சீதாப்பழமானது மிக விரைவாக பழுதடையக்கூடியதாகவும் சேதமடையக்கூடியதாகவும் அழுகும் தன்மையுடையதாகவும் உள்ளது. எனவே, இது கவனத்துடன் கையாளப்படவேண்டிய பழமாகும். இலங்கையில் அதிகரித்துவரும் வணிக ரீதியான சீதாப்பழ செய்கையின் காரணமாக வெகுவிரைவாக வரும் காலங்களில் மிக அதிகமான அறுவடையானது எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே இந்த நிலைமைகளின் அடிப்படையில் இப்பழம்சார்ந்த பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் தொடர்பிலான ஆராய்ச்சிகள் இன்றியமையாதவையாக உள்ளன. எனவே, இந்த ஆராய்ச்சியானது சீதாப்பழத்திலிருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை உருவாக்குவதும் அவற்றின் போசனை பெறுமதி தொடர்பில் மதிப்பிடுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. எமது முக்கிய இலக்குகள், உலர்த்தப்பட்ட சீதாப்பழ தூளினது நிறமாற்றத்தை தடைசெய்தல், உறையவைக்கப்பட்ட புரோபயோட்டிக் யோகட் தயாரித்தல் மற்றும் சீதா இலையிலிருந்து மூலிகை தேயிலை தயாரித்தல் என்பனவாகும். சீதாப்பழ தூளினது நிறமாற்றத்தை தடைசெய்வதற்கான சோதனைகள் நடைபெற்றுக்கொண்டுள்ளன.

4. ஓசோன் பரிகரணத்துடன் கூடிய கரட் (Daucus *corota L*) கழுவும் உபகரணமொன்றினை உருவாக்குதல் மற்றும் அதன் செயல்திறனை மதிப்பிடுதல்

கரட் (*Daucus carota* L.) , உருளைக்கிழங்கு(*Solanum tuberosum*) , முள்ளங்கி(*Raphanus raphanistrum*) என்பன இல்ங்கையின் முக்கியமான பொருளாதார பய்ர்களாக உள்ளபோதிலும் *Erwinia* spp இன் காரணமாக ஏற்படும் மென் அழுகல் நோயினால் அவை அதிக அறுவடைக்கு பின்னான இழப்புக்கு உள்ளாகின்றன. ஓசோனானது நோய்களை ஏற்படுத்தும் அங்கிகளை செயலிழக்கச் செய்வதில் வினைத்திறனுடையதாக உள்ளபடியினால், இந்த நோயிலிருந்து பாதுகாப்பதற்காக ஓசோன் பரிகரணத்துடன் கூடிய கரட் (Daucus *corota L*) கழுவும் உபகரணமொன்றினை உருவாக்கும் ஆராய்ச்சியினை நாம் செயற்படுத்திக்கொண்டு வருகின்றோம். இந்த ஆராய்ச்சி 20149ஆம் ஆண்டின் 4வது காலாண்டில் தொடங்கப்பட்டு தொடர்ச்சியாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

5. மேம்படுத்தப்பட்ட பதப்படுத்தல் மற்றும் களஞ்சிய தொழில்நுட்பத்தின் மூலம் பெரிய வெங்காயத்தின் (*Allium cepa*) அறுவடைக்கு பிந்திய இழப்பைக் குறைத்தல்

இந்த ஆராய்ச்சியானது மேம்படுத்தப்பட்ட பதப்படுத்தல் மற்றும் களஞ்சிய தொழில்நுட்பத்தின் மூலம் பெரிய வெங்காயத்தின் (*Allium cepa*) அறுவடைக்கு பிந்திய இழப்பைக் குறைப்பதற்காகவும் விவசாயிகள் போகமற்ற காலப்பகுதியில் அவற்றை விற்பனை செய்வதன் மூலம் அவர்களது வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காகவும் விதையுற்பத்தியை ஊக்குவிப்பதற்காகவும் தொடங்கப்பட்டுள்ளது. இதன் நோக்கமானது, வெங்காயத்தினை பதப்படுத்துவதற்கும் அதனை களஞ்சியப்படுத்துவதற்குமான களஞ்சியமொன்றினை வடிவமைத்தலும் அதில் ஏற்படக்கூடிய இழப்புக்களை மதிப்பிடுதல் மற்றும் அதன் செலவுக்கான வினைதிறனை மதிப்பிடலும் ஆகும்

களஞ்சியத்தின் வடிவமைப்பானது முடிவடைந்துள்ளது. அதன் கட்டுமானமானது கொள்முதல் நடவடிக்கைகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதால் தொடங்கப்படவில்லை. நிழலில் பதப்படுத்துவதன் விளைவினை அறிவதற்கான முற்சோதனையானது நடாத்தப்பட்டுள்ளது. தம்புள்ள சிவப்பு தெரிவானது இவ்வாராய்ச்சிக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளது. இது கல்நாவையிலுள்ள விவசாயியிடம் இருந்து நேரடியாக பெற்றுக்கொள்ளப்பட்டது. பதப்படுத்தல் இல்லாமல் மற்றும் நிழல் பதப்படுத்தல் என இரு வகையான பரிகரணங்கள் இதற்காக பாவிக்கப்பட்டன. இரு வார இடைவெளிகளில், நிறையிழப்பு, அழுகும் வீதம், முளைக்கும் வீதம் மொத்த கரையக்கூடிய கரையங்களின் அளவு என்பன இரு பரிகரணங்களிலும் பெறப்பட்டு ஒப்பீடு செய்ய்ப்பட்டன. தரவுப் பகுப்பாய்வு தற்போது நடைபெறுகின்றது.

6. வெட்டுப் பூக்களின் சுயவாழ்வுக்காலத்தையும் தரத்தையும் மேம்படுத்தக்கூடிய உடனடியாக பாவிக்கக்கூடிய சேர்வையொன்றினை தயாரித்தல்

வெட்டுப் பூக்கள் வர்த்தகத்தில் பெரும்பான்மையானவர்களாக பெண்கள் உள்ளனர். பொருத்தமற்ற அறுவடைக்கு முந்திய மற்றும் பிந்திய செயற்பாடுகளினால் வெட்டுப் பூக்கள் மிகக் குறைந்த ஆயள் காலத்தை கொண்டுள்ளன. எனவே அவற்றை இயற்கையழகுடன் நீண்ட காலம் வைத்திருப்பது மிகக் கடினமாக உள்ளதால் இத்தொழில் துறையில் அதிக அளவில இழப்புக்கள் ஏற்படுகின்றன. எனவே இந்த ஆராய்ச்சியின் மூலம் நேரடி பயனாளர்களாக இத்தொழிலில் ஈடுபடுபவர்களும் முறைமுக பயனாளர்களாக பயனர்களும் உள்ளனர். வெட்டுப்பூக்களின் வாழ்வுக் காலத்தை மேம்படுத்தும் உடனடியாக பாவிக்கக்கூடிய கலவையானது இலங்கையில் மிகக் குறைவாகவே உள்ளது. எனவே, வெட்டுப் பூக்களின் சுயவாழ்வுக்காலத்தையும் தரத்தையும் மேம்படுத்தக்கூடிய உடனடியாக பாவிக்கக்கூடிய சேர்வையொன்றினை தயாரித்தலை நோக்காக கொண்டு இந்த ஆராய்ச்சி வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சியின் வெளியீடானது, அறுவடைக்கு பிந்திய இழப்பை குறைப்பதன் மூலம் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் பயனளிப்பதாக அமையும்.

7. நீரகற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகளை மேம்படுத்துவதன் மூலம் நீரகற்றப்பட்ட பழங்களின் தர இயல்புகளை மேம்படுத்தல்

நீரின அளவை குறைப்பதனூடாக நுண்ணங்கிகளினதும் நொதியங்களினதும் செயற்பாடுகளை கட்டுப்படுத்தி பழங்களை பாதுகாக்கும் ஒரு முறையே நீரகற்றல் நுட்பமாகும். பல நாடுகளில் நீரகற்றப்பட்ட பழங்கள் பிரமல்யமானதாகவும் சிறந்த சந்தைப் பெறுமானத்தை கொண்டதாகவும் உள்ளன. ஏற்றுமதிக்காக இலங்கையில் இவ்வுற்பத்திகளை மேற்கொள்வதற்கு அதிக சாத்தியப்பாடுக்ள உள்ளபோதிலும் இங்கு உற்பத்தி செய்யப்படும் இவ்வுற்பத்திகள் சரியான மற்றும் நிலையான தரத்தினை கொண்டிராத படியினால் ஏனைய நாடுகளுடன் (தாய்லாந்து, விலிப்பைன்ஸ், மலேசியா, சீனா, இதர) போட்டியிடுவதில் சிக்கல்கள் நிலவுகின்றன. எனவே இந்த ஆராய்ச்சியின் நோக்கமானது, நீரகற்றல் செயன்முறையின் பல்வேறு செற்பாடுகளை மாற்றிமைப்பதன் மூலம் ஏற்றுமதிக்கு ஏற்ற வகையில் நீரகற்றப்பட்ட பழங்களின் தரத்தை மேம்படுத்தலாகும். இந்த ஆராய்ச்சியின் கீழ் மாம்பழம், பப்பாசி: கெர்யா, வாழைப்பழம், அன்னாசி, பலாப்பழம், றம்புட்டான் மற்றும் அங்குஸ்தான் ஆகிய எட்டு பழங்கிளன் நீரகற்றப்பட்ட உற்பத்தியின் தரம் உயர்த்தப்படுவதோடு முற்பரிகரணம், உலர்த்தல் செயன்முறை போன்ற நீரகற்றல் செயற்பாடுகளின் செயன்முறைகள் மதிப்பிடப்பட்டு மேம்படுத்தப்படும்.





8. ஈரமான நெல்லினை காயவைப்பதற்கான வெப்ப உலர்த்தியை உருவாக்குதல்

பண்ணை மட்டத்தில் ஈரமான நெல்லினை மழைக்காலங்களில் காயவைப்பதற்கான ஒரு மேம்படுத்தப்பட்ட முறையானது இலங்கையில் உருவாக்கப்படாமல் உள்ளது. தற்போதுள்ள காயவைக்கும் முறைகளின் மூலம் பண்ணை மட்டத்தில் காயவைத்தல் சாத்தியமற்தாக உள்ளது. எனவே இவ்வாராய்ச்சியானது, மழைக்காலங்களிலும் பண்ணை மட்டத்தில் பாவிக்கக் கூடிய வெப்ப உலர்த்தியை தயாரிப்பதனை நோக்கமாகக் கொண்டதாகும். இவ்வருடம் இவ்வுலர்த்தி உருவாக்கப்பட்டுள்ளதோடு சில சோதனைகளும் செய்யப்பட்டுள்ளன.



மேம்படுத்தப்பட்ட இயந்திரத்தின் பரிசோதனை

9. முக்கியமான பழங்களின் செயற்கை கனியவைத்தல் செயன்முறையின்போது பழங்களில் காணப்படும் இரசாயன எச்சங்களை மதிப்பிடலும் பொருளாதார ரீதியில் நிலையானதும் மற்றும் பாதுகாப்பான கனியவைத்தலுக்காக மருந்தின் பாவனை அளவு தொடர்பில் நெறிமுறை ஒன்றினை ஏற்படுத்தலும்

பழங்களானது சிறந்த இயற்கையுணவாக உள்ளபோதிலும் அவை வேண்டுமென்றே இரசாயனங்களினால் மாசுபடுத்தப்படுகின்றது. முக்கியமாக இது செயற்கையான பழுக்கவைத்தலின் போதே இடப்பெறுகின்றது. இது பாரிய சுகாதார பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது. எதபோன் மற்றும் எதனோல் ஆகிய இரு இரசாயனங்கள் செயற்கை முறை பழுக்க வைத்தலுக்காக பாவக்கப்படலாம் என ஒரு ஆராய்ச்சி முடிவானது தெரிவிக்கின்றது. இவ்விரசாயனங்கள் பழங்களின் தோலினூடாக ஊடுருவி உள்ளே எதிலீனாக மாற்றமடைந்து பழுத்தலை விரைவுபடுத்துகின்றன. இம் முறையானது நுகர்வோரின தேவையை ஈடு செய்யவும் இலகுவானதாகவும் உள்ளபடியினால் பாவிக்கப்படுகின்றன. செயற்கை முறை பழுக்கவைத்தலினால் பல்வேறு சுகாதார தீங்குகள் ஏற்படுவதாக உள்ளதால் இது தொடர்பில தற்போது மிகுந்த கரிசனமானது நுகர்வோரால் காட்டப்படுகின்றது. எனினும் இந்த எதபோன் இரசாயனம் விசிறப்படுவதாலோ அல்லது வாயுவாக பாவிக்கப்படுவதாலோ ஏற்படக்கூடிய இந்த தீங்குகள் தொடர்பில் இலங்கையுட்பட எந்த நாட்டிலும் போதிய ஆய்வுச்சான்றுகள் வெளியிடப்படவில்லை. எனினும் இது மனித உடல் நலத்தை பாதிப்பதாக சில ஆதாரங்கள் பதியப்பட்டுள்ளன. எனவே இவ்வாறான பரிகரணங்களின்போதான எச்சங்கள் ஏற்படுத்தும் விளைவுகள் தொடர்பில் ஆய்வதும் அதன் பாவனைக்கான ஒழுங்குபடுத்தப்பட்ட முறையொன்றினை ஏற்படுத்துவதும் தரமான பழங்கள் சந்தைப்படுத்தப்படுவதற்கு முக்கியமானதாகும்

10. பாகற்காய், பச்சை மிளகாய் என்பவற்றின் அறுவடைக்கு முந்திய மற்றும் பிந்திய நோய்களை கட்டுப்படுத்துவதற்காக நெல் உமியில் உள்ள சிலிக்கனின் களப்பரிசோதனை

மரக்கறிகளில் பல்வேறு பங்கசுக்களால் ஏற்படும் நோய்கள் மரக்கறி உற்பத்தி மற்றும் வழங்கள் துறையில் பாரிய தடைகளை ஏற்படுத்துவதாக உள்ளது. இதனை கட்டுப்படுத்துவதற்கான அடிப்படை வழிமுறையாக பங்கசு நாசினிகளை தெளித்தல் செயன்முறையே உள்ளது. எவ்வாறாயினும் இந்த முறையினூடாக தொடர்ச்சியாக பங்கசு நாசினிகளை விசுறுவதால் பொருளாதார இழப்பு, சூழல் பாதிப்பு மற்றும் முக்கியமாக அவ்விரசாயணங்களுக்கு எதிர்ப்பு தன்மையுடைய பங்கசுக்கள் உருவாகுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளமை போன்ற பல்வேறு முக்கிய பிரச்சினைகள் காணப்படுகின்றன. எனவே உலகளவில் இதற்கு தீர்வாக சூழலிற்கு பாதுகாப்பான முறைகளை அறிவதற்கான பல்வேறு ஆராய்ச்சிகள் தொடர்ந்த வண்ணமுள்ளன. இதில் சிலிக்கன்(Si) பாவனை தொடர்பிலான ஆராய்ச்சிகள் முக்கியமானதாகவும் குறிப்பிடத்தக்கதாகவும் உள்ளன.

சிலிக்கன்(Si) தாவர நோய்க்கிருமிகளை கட்டுப்படுத்துவதில் உள்ள ஆற்றல் காரணமாக அது அதிகளவில் அழிக்கப்பட்டுள்ளது. நிலத்தில் அதிகளவில் சிலிக்கன் உள்ளபோதிலும் தாவரங்கள் பயன்படுத்தக்கூடிய சிலிக்கனின் அளவு (கரையக்கூடிய சிலிக்கன் -H_4SiO_4) மிகக் குறைவானதாகும். அதாவது 0.1 to 0.6 mM (Epstein 2009) என்ற அளவிலேயே உள்ளது. எனவே, தாவர இழையங்களில் Si சம்பந்தப்பட்ட நோய் எதிர்ப்பு தன்மையை அதிகரிப்பதற்கு தாவரங்கள் Siஐ அகத்துறிஞ்சும் அளவினை அதிகரிக்கவேண்டியுள்ளது. இதற்காக கரையக்கூடிய Si கொண்ட மண் திருத்த சேர்மானங்கள் இன்றியமையாதவையாகும்.

பாகல் (*Momordica charantia* L.) மற்றும் பச்சை மிளகாய் (*Capsicum annum* L.) ஆகிய பங்கசுக்களால் அதிகளவில் பாதிக்கப்படும் பயிர்களில் பங்கசுக்களை கட்டுப்படுத்துவதற்காக

செய்யப்பட்ட எமது முந்தைய ஆராய்ச்சியின் முடிவுகளானது, செயற்கையான பங்கசு நாசினிகளுக்கு பதிலாக நெல் உமி சாம்பலானது இப்பயிர்களின் பல்வேறுபட்ட வளர்ச்சி நிலைகளில் பங்கசு நோய்களை கட்டுப்படுத்துவதற்கு வெற்றிகரமாக பாவிக்கப்படுவத்கான அதிக வாய்ப்புக்களை கொண்டது என வெளிப்படுத்தியிருந்தது.

இருப்பினும் மேற்படி ஆராய்ச்சியானது, ஒரேமாதிரியான சூழலில் செயற்படுத்தப்படுவதற்காக பூச்சாடிகளில் செய்யப்பட்டிருந்தது. எனினும் உண்மைமயான களிலையானது மிகவும் வித்தயாசமானதாகவும் வேறுபட்டதாகவும் சிக்கலானதாகவும் உள்ளதோடு இடத்துக்கிடம் பாரிய வேறுபாடுகளை பல்வேறு காரணிகளிலும் கொண்டமைந்துள்ளமை வெளிப்படையானதாகும். எனவே உள்ளக ஆராய்சிசிகளின் அல்லது கட்டுப்படுத்தப்பட்ட நிபந்தனைகளில் செய்யப்பட்ட ஆராய்ச்சியின் முடிவானது களத்தில் வெற்றிகரமாக அமையவேண்டிய அவசியமில்லாது போகலாம். எனவே முந்தைய ஆராய்ச்சியின் முடிவுகளானது விவசாய விளைநிலங்களில் பாவிக்கப்படுவதற்கான சாத்தியப்பாடுகளை ஆராய்வது முக்கியமானதாகும். எனவே இந்த ஆராய்ச்சியானது, மூன்று வேறுபட்ட விவசாய விளைநிலைப் புரப்புகளான அநுராதபுரம், குருநாகல் மற்றும் கண்டி ஆகிய பிரதேசங்களில் பாகல் மற்றும் மிளகாயில் ஏற்படும் அறுவடைக்கு முந்திய, பிந்திய நோய்களை சூழல் நேயத்துடனும் குறைந்த செலவுடனும் விவசாயிகளால் இலகுவாக பாவிக்கப்படக்குடிய முறையிலும் கட்டுப்படுத்துவதில் உமிச்சாம்பலின் வினைதிறனை அறிவதனை நோக்காக கொண்டதாகும். இது 2020ஆம் ஆண்டிலும் தொடரும் ஆராய்ச்சியாகும்.

11. அநுராதபுரம், பொலன்னறுவை மாவட்டங்களில் உள்ள பாரிய, நடுத்தர மற்றும் சிறிய அரிசி ஆலைகளின் சக்தி பயன்பாட்டிற்கான வெளியீட்டினை தீர்மானித்தலும் அவர்கள் எதிர்கொள்ளும் உற்பத்தி, தொழிநுட்ப மற்றும் நிதியியல் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குதலும்

அரிசி உற்பத்தி செய்யும் துறையானது இலங்கையின் மிகப்பரிய விவசாயம்சார் உற்பத்தி துறையாகும். இன்றைய நிலையில் அதிகரித்த உற்பத்தி செலவினால் ஆலையாளர்கள் தமது உற்பத்திகளை விற்பனை செய்வதில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர் இந்த பாரிய உற்பத்தி செலவில் முக்கியமானதும் அதிக செலவினை ஏற்படுத்துவதுமாக உற்பத்திக்கான சக்தி பயன்பாடே உள்ளது. உற்பத்தகளுக்கு மின்சக்தியே அதிகமாக பாவிக்கப்படுகின்றது. மின்சாரமானது மத்திய மின்வழங்கள் நிலையத்திலிருந்தே பெற்றுக்கொள்ளப்படுகின்றது. மின்சாரமானது மோட்டார்,பம்பிகள், புளோவர், கொன்வேயர், மின் விசிறி, மின்குமிழ்கள் என பெரும்பான்மையானவற்றின் பாவனைக்கும் தேவையானதாக உள்ளது. அவித்தல், காயவைத்தல், ஆலைச்செயற்பாடுகளில் எரிபொருளும் மின்சாரமும் தேவைப்படுகின்றன. எனவே இவையனைத்தும் இறுதியான உற்பத்திச் செலவுகளில் உள்ளடக்கப்படவேண்டியதாகும்.

இந்த கற்றல் செயற்பாடானது பிரதானமாக அநுராதபுரம், பொலன்னறுவை மாவட்டங்களில் அமைந்துள்ள சிறிய, பெரிய, நடுத்தர ஆலைகளின் உற்பத்திச்செலவுகளை ஒப்பீடு செய்வதனையும் அவற்றின் பிரச்சினைகளை தீர்ப்பதனையும் பிரதானமாக கவனத்தில் கொள்கின்றது.



அரிசி பதனிடல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தினால் 1985ஆம் ஆண்டு செய்யப்பட்ட கற்றலின்படி இலங்கையில் வட, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்து மொத்தமாக 7006 அரிசி ஆலைகள் உள்ளன. இவற்றில் 77% (5375) ஆனவை பயனாளர்களிடம் உற்பத்திக்கான கட்டணத்தை அறவிடும் சிறிய அரிசி ஆலைகளாகும். எஞ்சிய 23 %(1631) ஆன ஆலைகளே வர்த்தக நோக்கிலான ஆலைகளாகும். வர்த்தக நோக்கிலான ஆலைகள் நெல் கொள்வனவு, களஞ்சியப்படுத்தல், அரிசியாக்கிய பின்னர் நாடு முழுவதும் விற்பனை செய்தல் ஆகிய செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன. தற்போது நெல் சந்தைப்படுத்தும் சபை, கைத்தாழில்

அபிவிருத்தி சபை, கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம், பிரதேச செயலகங்களில் ஆலைகளின் விபரங்கள் உள்ளன. எனினும் மேலதிக விபரங்கள் ஆலைகளின் பிரச்சினைகளுக்கு நீண்டகால தீர்வினை வழங்குவதற்கு தேவையாக உள்ளன.

உயர் மின்னழுத்த மின்சாரத்திற்கான அதிக கேள்வி, பொருத்தமற்ற முறையில் நிர்மானக்கப்பட்டுள்ள இயந்திரங்களினால் அதிகளவில் விரயமாக்கப்படும் மின் சக்தி, நெல் கொள்வனவு மற்றும் அரிசி விற்பனையில் நிலவும் அதிகரித்த போட்டி, வரிகள், சூழல் பாதிப்பு, விலையுயர்ந்த கொதிகலன், பாதுகாப்பற்ற கொதிகலன், கொதிகலன் அனுமதிப்பத்திரம், வேலையாட்கள் பற்றாக்குறை, அதிக நீர் பாவனை,எரிபொருள் தேவைப்பாடு, உற்பத்தி கொள்ளளவு, இயந்திர ஒழுங்கமைப்பு, போதிய இடவசதியின்மை, அதிக மின்சார பட்டியல், நிதிப் பரச்சினைகள் என பல்வேறு பிரச்சினைகளுடன் இயங்குகின்றமை இந்த ஆராய்ச்சிக்கான தரவு திரட்டலின்போது அறிந்துகொள்ளப்பட்டது. அத்துடன் சக்தி பாவனைக்கான கட்டணத்தினால் வேறுபட்ட பிரச்சினைகளை இத்துறை சந்திப்பதனையும் அிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது. அதாவது, மின் நிலைமாற்றியினை கொண்டிருக்கக்கூடிய ஆலைகளில், நாள் கட்டணம்(Off peak hours) 5.30am மணி தொடக்கம் -17.30 pm வரை ரூபா. 11.00. இரவு நேர கட்டணம் (Off Peak hours) 22.30 மணி தொடக்கம் 5.30 am வரை ரூபா.7.00: இரவு நேர கட்டணம் (Peak hours) 17.30 மணி தொடக்கம் 22.30 pm வரை ரூபா.20.30. சிறிய அரிசி ஆலைகளில் பகல் மற்றும் இரவு நேர கட்டணங்கள் ரூபா. 12.00 ஆகும். இவ்வாறான நிலைமைகள் பொருத்தமான நீண்டகால தீர்வுகளை வழங்குவதற்கு கட்டாயமாக கவனத்தில் எடுக்கப்படவேண்டியவையாகும். இவ்வாராய்ச்சியின் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டுக்கொண்டுள்ளது.

12. மரக்கறி வழங்கல் வலையமைப்பில் விலையிடல் யுக்திகளின் பொருளியல் மதிப்பீடு: தூய்மையான உற்பத்தியை நோக்கி

மரக்கறி வழங்கல் வலையமைப்பின் வெவ்வேறு நிலைகளில் உள்ள செலவு வேறுபாடுகளை அறிதல் எதிர்கால கொள்கை திட்டமிடலுக்கும் நடைமுறைப்படுத்தலுக்கும் தேவையான பிரதானமான செலவு விபரங்களை அடையாளப்படுத்த இன்றியமையாதவையாகும். எனவே இந்த ஆராய்ச்சியானது நாட்டினது பொருளாதார ரீதியில் முக்கியமான மரக்கறிகளின் வழங்கல் வலையமைப்பின் வழியே உள்ள செலவு வேறுபாடுகளையும் அதன் காரணிகளையும் அடையாளப்படுத்தி அவை தொடர்பில் கற்றுக்கொள்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. கரட், பீற்றூட், கறிமிளகாய், போஞ்சி, கத்தரி, பூசணி ஆகிய மரக்கறிகள் இதற்காக தெரிவுசெய்யப்பட்டுள்ளன. விவசாயிகள், சேகரிப்பாளர்கள், மொத்த விற்பனையாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள் என 500 உறுப்பினர்கள் இதற்காக தெரிவுசெய்யப்பட்டனர். இம் மரக்கறிகளின் உற்பத்தி வலயங்களான அநுராதபுரம், மாத்தளை, நுரைச்சோலை, நுவரெலியா, பதுளை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களும், மொத்த விற்பனை நிலையங்களான தம்புத்தேகம, மனிங், தம்புள்ளை, கெப்பட்டிபொல ஆகிய இடங்களும், அநுராதபுரம், குருனாகலை, கண்டி, கம்பஹா, கொழும்பு ஆகிய பிரதேசங்கள் நுகர்வோர் பகுதிகளாகவும் தெரிவுசெய்யப்பட்டது. முதன்நிலை இரண்டாம் நிலை தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்விற்கு (descriptive மற்றும் non-descriptive முறைகள்) உட்படுத்தப்பட்டது. முதன்நிலை தரவுகளானது, பரீட்சிக்கப்பட்ட கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்தினை பயன்படுத்தி தனிப்பட்ட நேர்காணல் மூலமாக பெற்றுக்கொள்ளப்பட்டன. பகுப்பாய்விற்கு அமைவாக, உற்பத்தி செலவு, வேலையாட்களுக்கான செலவு, பொதியிடல் செலவு, அறுவடைக்கு பின்னான இழப்பு, ஒவ்வொரு படிநிலையிலுமான இலாபம், தரகுப்பணம், போக்குவரத்து கட்டணம் என்பன குறிப்பிடத்தக்க செலவு காரணிகளாக இருந்தன. , உற்பத்தி செலவு (32%) மற்றும் அறுவடைக்கு பின்னான இழப்பு(30%) ஆகியவையே மரக்கறிகளின் இறுதி விலையை தீர்மானக்கும் அதிக செல்வாக்கான காரணிகளாக கண்டறியப்பட்டன. எனவே உற்பத்திச் செலவையும் அறுவடைக்கு பின்னான இழப்பையும் குறைப்பதன் மூலமாக மரக்கறிகளின் இறுதி விலையை குறைக்கக்கூடியதாக இருப்பதோடு வழங்கல் வலையப்பின் உறுப்பினர்களுக்கிடையே இலாபங்களில் பாரிய வித்தியாசம் இன்றியும் பேணப்படலாம்.

13. பழங்களுக்கு சேதமேற்படுத்தாத தொழிநுட்ப முறையை பயன்படுத்தி பழ ஈ பாதித்த மாம்பழங்களை கண்டறிதல்

இந்த கற்றலானது தொடக்க நிலை ஆய்வுகளில் அறியப்பட்ட சிக்கல்கள் காரணமாக ஆராய்ச்சி ஆலோசணைக்குழுவின் பரிந்துரைக்கமைய நிறுத்தப்பட்டது.

அபிவிருத்தி செயற்றிட்டங்கள்

தொழில்நுட்பங்களின் பிரயோகத்தையும் மற்றும் அறுவடைக்கு பிற்பட்டகால கைத்தொழில் மீது அவற்றின் தாக்கங்களையும் உறுதிசெய்யும் நிமித்தம், 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில், தேசிய அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவ நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி கருத் திட்டங்கள் பற்றி கீழே விவரிக்கப்பட்டுள்ளது. உற்பத்தியை அதிகரித்தல், ஏற்றுமதி சந்தைகள் பற்றி ஆராய்தல், விவசாய வணிக அபிவிருத்தி, உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்தல் முதலிய அம்சங்களை நோக்கிய இலக்குக்கொள்ளப்பட்ட தேசிய முந்துரிமைகள் காணப்படுகின்ற வேளையில், அறுவடைக்கு பிந்திய தொழில்நுட்பம், தேசிய நோக்கெல்லையின் முக்கிய முந்துரிமை பிரிவாக மாறியுள்ளது. இந்த சந்தரப்பசூழ்நிலையில், தேசிய அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவ நிறுவனம் அறுவடைக்கு பிந்திய தொழில்நுட்ப பிரிவில் காணப்படும் பிரச்சினைகளை அடையாளப்படுத்தும் நிமித்தம் அபிவிருத்தி கருத் திட்டங்களை மேற்கொண்டு நிறைவேற்றியுள்ளது. இவை அறுவடைக்கு பிற்பட்டகால இழப்புகளை குறைப்பதையும் மற்றும் விவசாய உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துவதையும் இலக்காககொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டள்ளன. மேலும், இந்தக் கருத் திட்டங்கள் நாடு முழுதிலும் விவசாய வணிக அபிவிருத்தியிற்கு மேம்பட்ட தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதை நோக்காக கொண்டமைந்திருந்தது.
2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில், தேசிய அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவ நிறுவனம் அறுவடைக்கு பின்-தொழில்நுட்பங்களை பயனுள்ள விதத்தில் பரம்பல் செய்யும் நிமித்தம் நாடளாவிய ரீதியில் 02 அபிவிருத்திக் கருத் திட்டங்களை செயற்படுத்தியுள்ளது. இந்தக் கருத் திட்டங்களுக்கு 'தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தின்' கீழ் கமத்தொழில் அமைச்சினூடாக மொத்தமாக ரூபா. 32.47 மில்லியன் நிதியளிக்கப்பட்டது. குறித்த அந்த அபிவிருத்தி கருத் திட்டங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. இலங்கையின் இலகுவில் பழுதடையக்கூடிய விவசாய உற்பத்திகளின் வழங்கல் வலையமைப்பில் அறுவடைக்கு பிந்திய இழப்பினை குறைப்பதற்காக பாதுகாப்பான பொதியினையும் கொண்டுசெல்லல் முறையினையும் அறிமுகப்படுத்தல்

தீவிரமான அளவு சார்ந்த இழப்பும் தரம் சார்ந்த இழப்பும் மரக்கறி, பழங்களின் வலையமைப்பின் சகல நிலைகளிலும் ஏற்படுகின்றது. இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வுகளின்படி மரக்கறி மற்றும் பழங்களின் அறுவடைக்கு பிந்திய இழப்பானது 30-35% ஆகும் என கணிப்பிடப்பட்டுள்ளது. இவ்விழப்பின் பெரும்பான்மையானது பொருத்தமற்ற பொதிகளுடன் அவை கொண்டுசெல்லப்படும்போது ஏற்படுகின்றது. எனவே இந்த செயற்றிட்டமானது, பொருத்தமான பொதியினை கொண்டுசெல்லலின்போது பாவிப்பதனை ஊக்கப்படுத்தவும் பிரபல்யப்படுத்தும் நோக்கத்துடன் செயற்படுத்தப்படுகின்றது. இது விவசாயிகள்,சேகரிப்பாளர்கள், கொண்டுசெல்வோர், மொத்த விற்பனையாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள் என சகலரையும் உள்ளடக்கியதாக உள்ளது. இந்த திட்டமானது மரக்கறி, பழங்களின் வலையமைப்பின் சகல பங்காளர்களுக்கும் 70% மானிய அடிப்படையில்

பிளாஸ்ரிக் கூடைகளை வழங்குவதை நோக்கமாக கொண்டுள்ளது. 2019ஆம் ஆண்டில் இலங்கையின் 4 முக்கியமான வலையமைப்பில் இருவகையான கூடைகள் மொத்தமாக 20,000 வழங்கி வைக்கப்பட்டன. மேலதிகமாக, மரக்கறி, பழங்களின் பொருத்தமான கையாளல் மற்றும் கொண்டுசெல்லல் தொடர்பில் 500 பயனாளர்களுக்கு பயற்சியளிக்கப்பட்டது





2. மேம்படுத்தப்பட்ட மா, வாழை, பப்பாசி, கொய்யா ஆகியவற்றின் வழங்கல் வலையமைப்பின் பதனிடல் செயன்முறை மற்றும் அவற்றின் தரத்தை மேம்படுத்தல்

பயிரிடும் நிலப்பரப்பு, உற்பத்தியினளவு மற்றும் நுகர்வின் அளவு ஆகியவற்றின் அடிப்படையில் மா, வாழை, பப்பாசி, கொய்யா ஆகிய பழங்கள் இலங்கையின் பிரதான பழப்பயிர் செய்கைகளாக விளங்குகின்றன. வருடம் முழுவதும் அதிக வருமானத்தை தரக்கூடியவாறு இப்பழப்பயிர்களை செய்கை பண்ணுவதற்கு இலங்கையின் காலநிலையும் இதர காரணிகளும் சாதகமானவையாக விளங்குகின்றன. இருப்பினும் அதிகளவில் ஏற்படும் அறுவடைக்கு பன்னான இழப்பு, குறைவான தரம் இவற்றுடன் இணைந்து பொருத்தமற்ற அறுவடைக்கு பிந்திய செயற்பாடுகளால் ஏற்படும் உணவின் நம்பகத்தன்மை (பாதுகாப்பு) தொடர்பிலான சிக்கல்களினால் இலாபம் குறைந்த அதேவேளை பிரச்சினைக்குரியதாகவும் இந்த தொழிற்துறையானது விளங்குகின்றது. எனவே 4 அபிவிருத்தி செயற்றிட்டங்கள் 2017ஆம் ஆண்டு இந்த பயிர்களின் வழங்கல் மற்றும் பெறுமதி வலையமைப்பை மேம்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டங்களின் மூலமாக வலையமைப்பின் சகல படிநிலைகளிலான செயற்பாடுகளையும் அவற்றுடன் தொடர்புடையவர்களின் அறிவினை விருத்திசெய்வதனூடாக மேம்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டங்களின் மூலம் தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களுக்கு தேவையான முக்கியமான உபகரணங்கள் இதற்காக வழங்கப்பட்டன. இந்த திட்டங்கள் 2018ஆம் ஆண்டிலும் தொடர்ந்தன. இலங்கையில் முழுவதும் பரவலாக "பழ பதனிடல் வலயங்கள்" நிறுவனத்தினால் உருவாக்கப்படுவதற்கு ஏதுவானதாக இத்திட்டங்கள் அமைந்திருந்தன. இதன் மூலம் முதிர் நிலை அறுவடை (முன் முதிர் நிலை அறுவடையை தவர்த்தல்), முறையான தரப்படுத்தல், வகைப்படுத்தல், எதிலீன் வாயுவின் மூலம் பாதுகாப்பான முறையில் பழுக்கவைத்தல்(கொய்யா நீங்கலாக), பாதுகாப்பான பொதியின் பாவனையுடனான கொண்டு செல்லல் (தோட்டத்தலிருந்து பொதியிடல் நிலையத்திற்கு பிளாஸ்ரிக் கூடைகளிலும் பொதியிடல் நிலையத்திலிருந்து பழுக்க வைக்கப்பட்ட பின்னர் சந்தைக்கு 5 படைகளைக் கொண்ட காட்போட் பெட்டிகளிலும்) போன்ற அறுவடைக்கு பிந்திய செயற்பாடுகள் மேம்படுத்தப்பட்டன. இதற்காக தரப்படுத்தல் வகைப்படுத்தல் மேசைகள், பழுக்க வைக்கும் அறை, வியாபார அடையாளத்திற்காக (brand) காட்போட் பெட்டிகள் மற்றும் ஸ்டிக்கர்கள் வழங்கப்பட்டன.

மேற்போந்த பழ வலயங்களை கண்காணித்தல் மற்றும் நடைமுறை ரீதியான பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு தேவையான மேலதிக தொழிநுட்ப ஆலோசனைகளை வழங்குவதனூடாக நாட்டின் விவசாயம்சார் தொழிற்துறையை முன்னேற்றுவதற்காக புதிய செயற்றிட்டமானது 2019ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இதன் மூலமாக 44 புதிய பழ வர்த்தக நாமங்ள அறிமுகப்படுத்தப்பட்டு தரமான மேற்கூறப்பட்ட பழங்கள் நுகர்வாளருக்கு நியாயமான விலையில் வழங்கப்பட்டன. அத்துடன் விவசாயிகள் மட்டுமன்றி வலையமைப்பில் உள்ள அனைவருக்கும் உயர் வருமானம் கிடைப்பதையும் உறுதி செய்யக்கூடியதாகவிருந்தது.

ஒழுங்குபடுத்தப்பட்ட அறுவடைக்கு பின்னான தொழிநுட்ப பாவனையை அறிமுகப்படுத்தியதன் மூலம் தொடர்புபட்ட பயனாளர்களின் வாழ்க்கை தரம் உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

தொழில்நுட்ப பரிமாற்ற செயற்பாடுகள்

தொழிநுட்ப பரிமாற்ற பிரிவானது அதனது பரவலான விரிவாக்கல் நிலையங்களினூடாக தொழுநுட்ப பரிமாற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கின்றது. இச்செயற்பாடுகளில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்பும் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. 2019ஆம் ஆண்டிலும் விரிவாக்கல் செயற்பாடுகள் களச்செயற்பாடுகளின் மூலம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தொழிநுட்ப பரிமாற்ற செயற்பாட்டிற்காக தெரிவு செய்யப்பட்ட வேறுபட்ட துறைகள்

அ) விவசாயப் பயிர்களில் அறுவடைக்கு பிற்பட்ட காலத்தில் ஏற்படும் இழப்புகளை குறைத்தல்

ஆ) களஞ்சிய முறைகளுக்கு தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்துதல்

இ) அரிசியினதும், பருப்பு வகைகளினதும் மற்றும் ஏனைய தானியங்களினதும் பதனிடுகை

ஈ) வாசனைப் பொருட்களின் பதனிடுகை


உ) பழங்கள் மற்றும் காய்கறிகளின் பெறுமதி சேர்ப்பு

ஊ) அரிசி மற்றும் பருப்பு சார் உற்பத்திகள்

எ) இலங்கையில் மானிட, போசாக்கு, உணவுப் பழக்க வழக்கங்கள் என்பன தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்

ஏழு அறுவடைக்கு பிந்திய -தொழில்நுட்ப நிலையங்களை கொண்டிருக்கக்கூடிய நாடளாவிய விரிவாக்கல் வலையமைப்பு கீழ்காணும் பிரதான பயிர் உற்பத்திப் பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ன.

1. அனுராதபுரம் (அனுராதபுரம், பொலன்னறுவை, திருகோணமலை ஆகிய மாவட்டங்கள் அடங்கிய)
2. வாரியபொல (குருணாகல், புத்தளம் ஆகிய மாவட்டங்கள் அடங்கிய)
3. கண்டி (கண்டி, மாத்தளை, கேகாலை ஆகிய மாவட்டங்கள் அடங்கிய)
4. நுவரெலியா (நுவரெலியா, வெலிமட, பதுளை ஆகியன அடங்கிய)
5. அம்பாறை (அம்பாறை, மொனராகல், மட்டக்களப்பின் ஒரு பகுதி, மகாவலி 'சி' முறைமை ஆகியன அடங்கிய)
6. அம்பாந்தோட்டை (அம்பாந்தோட்டை, மாத்தறை, காலி, எம்பிலிபிட்டிய ஆகியன அடங்கிய)
7. முல்லைத்தீவு (கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்கள் அடங்கிய)
8. கொழும்பு (கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்கள் அடங்கிய)




தற்போதைய நிலையில் 8 விரிவாக்கல் நிலையங்களினூடாக மாத்திரமே இலங்கை முழுவதற்குமான தொழிநுட்ப பரிமாற்ற செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

பயிற்சி

பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பின்வரும் இரண்டு வகுதிகளில் நடத்தப்பட்டன. அவை, நிறுவகத்தினுள் நடாத்தப்படும் வதிவிட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் களத்தில் நடாத்தப்படும் வதிவிடம் சாரா பயிற்சிகளாகும். இந்த சகல பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் அக்கறையுடைய தரப்புகளினது தேவைகளின் அடிப்படையில் காணப்படுகின்றன. இவை பயனாளர்களின் பயிற்சி சார்ந்த தேவைகளுக்கு உதவும் நிமித்தம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

வதிவிட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

இந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் அனுராதபுரத்தில் அமைந்துள்ள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் நடாத்தப்பட்டன. 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில், 50 குறுங்கால வதிவிட பயிற்சிப் பாடநெறிகள் நடத்தப்பட்டன. பல்வேறு அறுவடைக்கு பிந்திய தொழில்நுட்ப பிரிவுகளில் 1565 நபர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. விபரங்கள் கீழ்காணும் உருப்படங்களில் தரப்பட்டுள்ளன.



தே.ம.பி.மு.நி.இன் வதிவிட பயிற்சிகள்- 2019

குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் விவசாய உற்பத்திகளின் விநியோக பெறுமான சங்கிலிகளிலுள்ள சகல பங்காளர்களையும் இலக்காககொண்டிருந்தன. பிரதானமாக விவசாயிகள்/பெண் விவசாயிகள், சேகரிக்கும் தரப்புகள், ஏற்றியிறக்கும் தரப்புகள், மொத்த வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள்/வர்த்தகர்கள், பதனிடும் தரப்புகள் இந்த பங்காளர்களாக காணப்பட்டனர். அரச நிறுவனங்களினதும் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிலும் ஊழியர்களுக்காகவும், பல்கலைக்கழகங்களினதும், பாடசாலைகளினதும் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரிகளினதும் மாணவர்களுக்காகவும் வளவாளர்களுக்கான பயிற்சி எனும் தொனிப்பொருளின் கீழும், இந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. அறுவடைக்கு பிந்திய தொழில்நுட்பம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல், தொழில் முயற்சியாளர்களின் அபிவிருத்தி, இழப்புக்களை குறைத்தல், உற்பத்திகளின் பதனிடுகை மற்றும் உற்பத்திகளின் தர மேம்பாடு, அறுவடைக்கு பிற்பட்டகாலத்தில் பயன்படுத்தப்படும் இயந்திராதிகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பு முதலிய அம்சங்களை இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் இலக்குக்கொண்டிருந்தன.

குழு	விவரணம்	பயிற்சிகளின் எண்ணக்கை	பயிலுனர்களின் எண்ணிக்கை
அ	விவசாயிகள் /மகளிர் விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள்	6	248
ஆ	செயற்றிட்ட பயனர்கள் மற்றும் சிறிய/நடுத்தர தொழில் முயற்சியாளர்கள்	16	89
இ	அரச, கூட்டுறவு, தனியார், மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் விரிவாக்கல் அலுவலர்கள்	4	24
ஈ	இரண்டாம் நிலை பாடசாலை, பல்கலைக்கழகங்கள், விவசாய பாடசாலைகள், தொழிநுட்ப கல்லூரிகள் என்பனவற்றின் மாணவர்கள்	24	1204
மொத்தம்		**50**	**1565**

கள பயிற்சிகள்/ வதிவிடம் சாரா பயிற்சிகள்

இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் களத்திலேயே நடத்தப்படுகின்றன. இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் தே.அ.பி.மு.நி இன் விரிவாக்கல் நிலையங்களினாலும் மற்றும் அனுராதபுரத்தில் அமைந்துள்ள ஆ.அ. நிலையத்தினாலும் நடாத்தப்படுகின்றன. 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில், 141 கள பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் மற்றும் செயல் விளக்கங்களும் நடாத்தப்பட்டன. இவற்றில் 3800 தனிநபர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் விவசாய உற்பத்திகளின் விநியோக சங்கிலியின் பங்காளர்களை இலக்காகக்கொண்டிருந்தன. இவை, பிரதானமாக விவசாயிகள்/மகளிர் விவசாயிகள், சேகரிப்பாளர்கள், கொண்டுசெல்வோர், மொத்த விற்பனைத் தரப்புகள், சில்லறை வியாபாரிகள்/வர்த்தகர்கள், பதனிடும் தரப்புகள் போன்ற தரப்புகளை இலக்காகக்கொண்டிருந்தன. அறுவடைக்கு பின்-தொழில்நுட்பம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல், தொழில்வாண்மை அபிவிருத்தி, இழப்புக்களை குறைத்தல், உற்பத்திகளின் பதனிடுகை மற்றும் உற்பத்திகளின் தர மேம்பாடு, அறுவடைக்கு பிற்பட்டகாலத்தில் பயன்படுத்தப்படும் இயந்திராதிகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பு முதலிய அம்சங்கள் இந்த நிகழ்ச்சித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இந்தப் பயிற்சிகளின் பயனாளர்களின் அதிகமானோர் இந்த பயிற்சி நிழக்ச்சித் திட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்துகின்றனர். கிடைத்த தொழில்நுட்ப அறிவின் ஊடாக அறிவு மேம்பாடு, உற்பத்தியின் தர மேம்பாடு, வருமானம் ஈட்டல், கிராமிய ஊக்குவிப்பு மற்றும் ஏனைய நன்மைகள் போன்ற நன்மைகள் அடையப்பட்டன. விவசாயத் துறையில் உள்நாட்டு உற்பத்திகளின் தர மேம்பாட்டிற்கும் மற்றும் இழப்புகள் குறைவுக்கும் இது நேரடியாக பங்களிக்கின்றது. இவை நாட்டின் உணவுப் பாதுகாப்பின் தேசிய அபிவிருத்தியினை கட்டுப்படுத்தும் பிரதான காரணிகளில் ஒரு காரணியாக விளங்குகின்றது.










குழு	விவரணம்	பயிற்சிகளின் எண்ணக்கை	பயிலுனர்களின் எண்ணிக்கை
அ	விவசாயிகள்/மகளிர் விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள்	49	1648
ஆ	செயற்றிட்ட பயனர்கள் மற்றும் சிறிய/நடுத்தர தொழில் முயற்சியாளர்கள்	48	497
இ	அரச, கூட்டுறவு, தனியார், மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் விரிவாக்கல் அலுவலர்கள்	27	740
ஈ	இரண்டாம் நிலை பாடசாலை, பல்கலைக்கழகங்கள், விவசாய பாடசாலைகள், தொழிநுட்ப கல்லூரிகள் என்பனவற்றின் மாணவர்கள்	11	34
மொத்தம்		**141**	**3800**



பங்காளர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகள் வாழ்க்கைத் தர மேம்பாட்டிற்கும் கைத்தொழில் அபிவிருத்திற்கும் பொருளாதார அபிவிருத்தியிற்கும் மற்றும் சமூக அபிவிருத்தியிற்கும் பங்களித்திருந்தது. இந்த நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் தமது கைத்தொழில்களை ஆரம்பித்த / அபிவிருத்தி செய்த சில பயனாளர்களின் விபரங்கள் கீழே பட்டியல்படுத்தப்பட்டுள்ளன.

இல	பெயர்	முகவரி	தொலைபேசி இல.
01	எம்.பி.எம்.நந்தசேன	அபயபுர, பரகஹகலே	077-0598685
02	எம்.ஏ. ரவீந்திர குமார	இல. 20, பௌத ஜனபாதய, தீகவாபிய	071-4898915
03	எம்.எம்.என். மதுபாசினி	1B/11A, நாமலோயா, அம்பாறை	078-3359010
04	எம்.எல். பிரியதர்சினி	36A, பெனிகம, ஹிங்குரான	077-9580645
05	எம்.டபிள்யூ.ஜி. மல்சாசுதர்சினி	ஜம்புகஸ்லந்த, வட்டவனகம, ஊவா கங்கொடகம, அம்பகல்ல	071-0495059
06	சமிந்தசுதேஷ்	5ம் கட்டை, கொல்லதெனிய, மரியரவ	076-8950424
07	டபிள்யூ.எம்.சுசிரிபாலா	வட்டவனகம, உவா கங்கோதகம, அம்பகல்ல	076-7867260
08	எம்.எல்.பிரியதர்சினி	36A, 36 ஏ, பெரனிகம, ஹிங்குரான	077-9580645
09	ஐ.டீ. ஹேமந்த லலித் குமார	பக்மீகஹா வத்த, மஹோ	071-3877069
10	ஆர்.பி.மதுர லங்கா தர்மசிறி	வெலகெதர, நக்கவத்த, நாரம்மல	071- 5695902
11	துசாரிகீதிகா	துன்ஹெல ரசஹெல, அதுருவல, தம்பதெனிய	076-6250594
12	யு.ர்.ஆ.சு.மு. அலககோன்	148/1, காவிசிகமுவ, மொரதிஹா	.070.3390009
13	பி.நிரோசா சந்தனி பிரேமரத்ன	661/2, கொங்கஹமுல வத்த, ஹன்ஹமுனுவ, மாஸ்பொத்த	071-3480255
14	டி.எம்.பி.நில்மினி திஸ்நாயக்க	மஹவேல நிவாசா, பஹல உவிடிகம, வெல்லகல	071- 5272681
15	கே.எம். ரம்யலதா	நாபடவல, பதியபெலல்ல	0713804275
16	ஆர்.எம்.ஜெயதிலகே	வட்டரகொட, வலபனே	0717013312

17	எச். ஏ. டி. சிரோமிகா	23, வீரசேகர இடம், பூண்டுலோயா	0710571546
18	ஆர்.எம். பண்டாரமெனிகே	158/1, ஹல்கொல்ல, ஹபுகஸ்தலாவ	0756049833
19	சமன் புதிய பழங்கள்	மத்திய சந்தை, கேகாலை	0777807692
20	அஞ்சலா நிசாந்தி ரணதுங்கே	சிசிர ஸ்டோர்ஸ், இஹலகம, மகா உதகம	0776578095
21	கே.ஜி. குணரத்னே	99, மாபகந்த வடக்கு, நாவலபிட்டி	0713520159
22	கே.ஏ.வி. சுனில்	கொங்கில் ஜனபாதய, புபுரெஸ்ஸ	0713380708
23	எஸ்.சர்மிளா	தண்ணீரூற்று, முல்லைத்தீவு	





பரிமாற்றம் செய்யப்பட்ட தொழிநுட்பங்களும் தொடர்பான சில செயற்பாடுகளும்

கண்காட்சிகள்

நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட பல கண்காட்சி நிகழ்ச்சித் திட்டங்களில் இந்த நிறுவனம் பங்குபற்றியது. கண்காட்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றியதனூடாக, இந்த நிறுவகம் நாட்டிலுள்ள பல்வேறு பங்காளர்களுக்கு தொழில்நுட்பங்களை பரம்பல்செய்வதற்கு எதிர்பார்த்திருந்தது. கண்காட்சி சார் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான விபரங்கள் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

திகதி	நிகழ்ச்சி	இடம்	நிறுவனம்
22.02.2019	பிரதேச தொழில் முயற்சியாளர் மன்றம் மற்றும் சிறு தொழிநுட்ப கண்காட்சி	அநுராதபுரம்	இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை
01.03.2019	பிரதேச தொழில் முயற்சியாளர் மன்றம் மற்றும் சிறு தொழிநுட்ப கண்காட்சி	வவுனியா	இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை
06.03.2019-08.03.2019	சென்எக்ஸ் 2019 சிசு குசலதா தெக்மா (CenEx 2019 Sisu Kusalatha Dekma)	அநுராதபுரம்	மத்திய கல்லூரி, அநுராதபுரம்
29.03.2019-31.03.2019	திகாமடுல்ல நவோதய தொழிநுட்ப மற்றும் வர்த்தக கண்காட்சி (DNTTE) 2019	அம்பாறை	ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
24.07.2019-27.07.2019	V 2025 இலங்கை தொழில்முயற்சிகள் (Enterprises Sri Lanka)	அநுராதபுரம்	விவசாய, கிராமிய பொருளாதார விவகாரங்கள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் நீர் வள அமைச்சு
22.08.2019	க்ருசிமேலா	அநுராதபுரம்	இலங்கை இரஜரட்ட பல்கலைக்கழகம்
17.09.2019-10.09.2019	V 2025 இலங்கை தொழில்முயற்சிகள் (Enterprises Sri Lanka)	யாழ்ப்பாணம்	விவசாய, கிராமிய பொருளாதார விவகாரங்கள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் நீர் வள அமைச்சு
17.09.2019-21.09.2019	வட மாகாண விவசாய கண்காட்சி-2019	யாழ்ப்பாணம்	வட மாகாண விவசாய திணைக்களம்





ஆலோசனை மற்றும் இதர சேவைகள்

இந்த தே.அ.பி.மு.நிறுவனம் அறுவடைக்கு பிற்பட்டகால கைத்தொழிலில் நேரடியாக அல்லது மறைமுறைக சம்பந்தப்படுகின்ற அரச, தனியார் மற்றும் கூட்டுறவுத் துறை நிறுவனங்களுக்கு ஆலோசனை மற்றும் இதர சேவைகளை தொடர்ந்து வழங்கியுள்ளது. புதிய பதனிடும் ஆலைகளை தாபிப்பதற்கும் இருக்கின்ற ஆலைகளை நவீன மயப்படுத்துவதற்கும் அரிசி ஆலை உரிமையாளர்களும் மற்றும் உணவு பதனிடும் தரப்புகளும் தமது நாளாந்த செயற்பாடுகளில் எதிர்நோக்குகின்ற தொழில்நுட்பப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் பொருட்டும் 2019ஆம் ஆண்டில் 13 ஆலோசனை சேவைகளை நிறுவனம் வழங்கியுள்ளது.

விசேடமாக 2016ஆம் ஆண்டிலிருந்து பொது திறைசேரியின் அபிவிருத்தி நிதி திணைக்களத்துடன் ஆலோசனை சேவை வழங்குநராக இணைந்து களஞ்சியசாலை அமைக்கும் திட்டத்தில் (Warehouse Receipt Project) பணியாற்றி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ், எம்பிலபிட்டிய, மெதிரிகிரிய, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் முற்தூய்மைப்படுத்தல், காயவைத்தல் வசதிகளுடன் கூடிய களஞ்சியசாலைகள் அமைக்கப்பட்டன.

இதற்கு மேலதிகமாக, மூன்று சான்றிதழ் கற்கை நெறிகளை வாசன திரவிய பதனிடல், அரிசி மற்றும் அரிசி மா பதனிடல் மற்றும் மரக்கறி பழங்களின் நீரகற்றல் எனும் தொனிப்பொருள்களின் கீழ் வழங்கியிருந்தது.

ஆலோசனை சேவைகளின் சுருக்கமான விபரம் கீழே அட்டவனைப்படுத்தப்பட்டுள்ளது.


இல.	வாடிக்கையாளரின் பெயர்	சேவைகள்
01	களஞ்சிய நிதி திட்டம் ((Warehouse Receipt Financing Project (WHRFP)), நிதி அமைச்சு, கொழும்பு -01	களஞ்சியசாலைக்கான ஆலோசனை
02	நெலம்ரணதுங்க, 38/1, தேவல வீதி, பாகொட, நுகேகொட.	பூசணி மா மற்றும் அவல் உற்பத்தி தொடர்பிலான திட்ட அறிக்கை
03	என்.டி.என்.பி. குலசிங்க, நிசாது அரிசி ஆலை, வெளலீவ, பொல்பிதிகம.	அரிசி ஆலைதொடர்பான தொழிநுட்ப அறிக்கை
04	பல் சேவை கூட்டுறவு சங்கம் லிமிடெட், திம்புலாகல, மனம்பிட்டிய	விபரக்குறிப்பு அறிக்கை, திம்புலாகல ப.நோ.கூ.ச
05	என்.எம்.அம்ரசிங்க, அமரா தயாரிப்பு, மகாகந்தராவ, ரம்பாவ, அநுராதபுரம்.	அரிசி சூப் கட்டிகள் தொடர்பான தொழிநுட்ப அறிக்கை
06	பிரதி விவசாயப் பணிப்பாளர், வட மத்திய மாகாணம், அனுராதபுரம்.	மாகாண விவசாய திணைக்களத்திற்கான விபரக்குறிப்பு
07	வரையறுக்கப்பட்ட பல்நோக்கு கூட்டுறவுச் சங்கம், பலுகஸ்தமன, பொலன்னறுவ	அரிசி மா உற்பத்திக்கான தரமான இயந்திரங்கள் தொடர்பிலான விபரக்குறிப்பு, பலுகஸ்தமன ப.நோ.கூ.ச
08	ஜே.ஏ.ஆர்.அனுரங்கா, பசுமைசாலை விவசாய மேம்பாட்டு மையம், நுவரலகந்த, சமுர்த்தி வீதி, யஹலேகம, அநுராதபுரம்.	அரிசி மா உற்பத்தியும் வாசனைத் திரவிய பதனிடலும்
09	மதுசாநவீன் கொடிபிலியாராச்சி, கொழும்பு வீதி, கொட்டிகல, ஹடபங்கொட.	தானிய மா உற்பத்தி
10	எல்.ஏ.டி.பிரசன்னா ஜெயராஜ், இல. 411/04/64> நவஹந்துரக்கெத, தலாவ.	வாசனைத் திரவிய பதனிடல்
11	ஏ.எம்.ஜனக துசார, ருகத்தன, மஸ்பாச	நெல் உலர்த்தல்
12	இமேசா செவ்வந்தி, ஓயாகம, ரம்பாவ	வாசனைத் திரவிய பதனிடல்
13	பி.ஸ்வர்ணலதா, கட்டியாவ வீதி, பிந்தலியாசால, எப்பாவல.	அரிசி மா உற்பத்தி

ஆய்வுகூட சேவைகள்

அரச துறை நிறுவனங்களிலிருந்தும் மற்றும் தனியார் துறை நிறுவனங்களிலிருந்தும் பௌதீக, இரசாயன, நுண்ணுயிரியல் அம்சங்களுக்காக கிடைத்த மாதிரிகளை பகுப்பாய்வு செய்ததன் மூலம் இந்த நிறுவனம் நாட்டில் விவசாய உற்பத்திகளின்/உணவு உற்பத்திகளின்

தரங்களை கட்டுப்படுத்தும் செயல்நடவடிக்கையில் முக்கியமான ஒரு பங்கை வகித்தது. தே.அ.பி.மு.நி நன்கு அபிவிருத்தி செய்யப்பட்ட இரசாயன ஆய்வுகூட வசதிகளைக் கொண்டுள்ளது. குறிப்பாக அணு உறிஞ்சு ஸ்பெக்ட்ரோ.ஃபோட்டோமீட்டர், வாயு க்ரோமடோகிராபி மற்றும் உயர் செயல்திறன் திரவ குரோமடோகிராபி, வாயு க்ரோமடோகிராபி திணிவு ஸ்பெக்ட்ரோமீட்டர் முதலியன இந்த ஆய்வுகூட வசதிகளில் அடங்குகின்றன. மேலும் புதிதாக புதுப்பிக்கப்பட்ட நுண்ணுயிரியல் ஆய்வு கூடமானது, உயிரியல் பாதுகாப்பு அறை, ஓட்டோகிளேவ்ஸ், அடைகாப்பான் (incubators), அவன், ஒளி நுண்காட்டி, படசெயலாக்க நுண்காட்டி என பல உபகரணங்களை கொண்டுள்ளது.

இந்த வசதிகளைப் பயன்படுத்தி, ஆய்வக வசதிகளை வெளியாட்களுக்கு வழங்குவதற்கும் அதன் சில ஆய்வக பகுப்பாய்வு சேவைகளுக்கு அங்கீகாரம் பெறுவதற்கும் தே.அ.பி.மு.நி தொடங்கியுள்ளது. தானியக் கிடங்குகளின் தூய்மைப்படுத்தல் (புகையூட்டல் மூலமான பூச்சி நீக்கம்- Fumigation) என்பது ஆய்வக சேவைகள் மூலம் பங்குதாரர்களுக்கு வழங்கப்படும் மற்றொரு ஊக்குவிப்பு வசதியாகும்.



ஆற்றல் கட்டியெழுப்பல் மற்றும் உற்பத்தித்திறன் அபிவிருத்தி

